Kanton Zürich
Bildungsdirektion
Volksschulamt

தாய்மொழி மற்றும கலாச்சார த்திற்கான அடிபபடை பாடததிடடம (HSK)

பாடத்தின வரையறைகளைக குறிதத விளக்கங்களுடன

உள்ளடக்கம்

1 அடிப்படை பாடத்திட்டத்தின் நோக்கம் 5
HSK-பாடம் ஆரம்பம் முதல் இன்று வரை 5

2 கருத்து மற்றும் அடிப்படைகள் 7
கருத்து 7
வழிகாட்டும் நியமங்கள் 7
தோற்றம் மற்றும் கட்டமைப்பு 8

3 கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய புரிதல் 10
திறன் சார் கற்பித்தல் 10
திறன் சார் மதிப்பீடு 10
வீட்டுப்பாடம் 11
பயிற்று கருவிகள் மற்றும் கற்பித்தல் கருவிகள் 11
கற்பிக்கும் முறை விருப்பத் தேர்வு 12
பாடங்களின் நடுநிலைமை 12

4 «மொழிகள்» துறை 14
துறையின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்கள் 14
பன்மொழிக் கல்வி கற்பிக்குங் கலை 15
திறன்சார் பகுதிகள் 15

5 «இயற்கை, மனிதன், சமூகம்» துறை 18
துறையின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்கள் 18
திறன்சார் பகுதிகள் 19

6 தனிப்பட்ட சுழற்சிகளில் பாடம் 23
சுழற்சி 1 23
சுழற்சி 2 24
சுழற்சி 3 24

7 சொற்களஞ்சியம் 25

8 இணைப்புகள்
இணைப்பு I: சூரிச் மாநிலத்தில் அடிப்படை பாடத்திட்டம் 32
இணைப்பு II: நிலைகளும் பாடங்களும் – ஒரு கண்ணோட்டம் 37
இணைப்பு III: பிரசுரங்கள் 43

Impressum

Herausgeberin

Bildungsdirektion Kanton Zürich, Volksschulamt

Erarbeitet in Zusammenarbeit mit den HSK-Trägerschaften

Wissenschaftliche Beratung durch Dr. Ursula Ritzau, PH FHNW, und Prof. em. Dr. Dr. Basil Schader, PHZH

Gestaltung
raschle & partner
raschlepartner.ch

Übersetzung
Interserv AG

Kontakt
Volksschulamt, Abteilung Besondere Förderung
Sektor Interkulturelle Pädagogik
Walchestrasse 21
8090 Zürich
+41 43 259 53 61
ikp@vsa.zh.ch www.zh.ch/hsk

Die Orientierung an diesem Lehrplan wird auch in anderen Kantonen empfohlen: Basel-Landschaft, Basel- Stadt, Bern, Glarus, Luzern, Schaffhausen, St. Gallen und Thurgau.

Kanton Zürich
Gemeinnütziger Fonds

Finanzielle Unterstützung durch den gemeinnützigen Fonds des Kantons Zürich

Vollständig überarbeitete
4. Auflage 2023

© Bildungsdirektion Kanton Zürich

முன்னுரை

பன்மொழி மற்றும் *கலாச்சார ஊடுருவல் திறன்களை* மேம்படுத்துவது பள்ளியின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளிகளின் சலுகைகளுக்குத் துணையாக, தாய்மொழி மற்றும் கலாச்சாரத்தில் பாடங்கள் (HSK) இந்த இலக்கைத் தொடர்கின்றன. இந்தப் பாடங்களில், *இருமொழி* மற்றும் *பன்மொழி* கொண்ட குழந்தைகளும் இளைஞர்களும் தங்கள் *பூர்வீக மொழியில்* தங்கள் நிபுணத்துவத்தை விரிவுபடுத்துகிறார்கள். மேலும் அவர்கள் தங்களின் தற்போதைய *வாழ்க்கைச் சூழல்கள்* மற்றும் தங்களின் பூர்வீக கலாச்சாரங்கள் பற்றிய அறிவையும் பெறுகிறார்கள். சூரிச் மாநிலத்தில் தாய்மொழி மற்றும் கலாச்சாரத்திற்கான அடிப்படை பாடத்திட்டம் அடங்கிய (HSK)படிப்புகளை *பூர்வீக நாடுகளும்* தனியார் நிதியுதவி நிறுவனங்களும் வழங்குகின்றன. இவைகள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக, இதற்கான தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆதரவைக் கல்வி இயக்குனரகத்தின் வழியாகப் பெற்றுள்ளன.

2011 ஆம் ஆண்டில் சூரிச் மாநிலத்தின் கட்டாய படிப்புக்கான அரசுப் பள்ளி அதிகாரம், HSK நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள் மற்றும் பிற வெளிப்புற நிபுணர்களின் ஈடுபாட்டுடன் இந்த படிப்பிற்கான அடிப்படை பாடத்திட்டத்தை உருவாக்கியது. இது சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெர்மன் மொழி பேசும் பல்வேறு மாநிலங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. தனிப்பட்ட வழங்குனர்களின் பாடத்திட்டங்களைத் தரப்படுத்துவதும், கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளியின் பாடத்திட்டத்துடன் அவற்றை ஒருங்கிணைப்பதும் இதன் நோக்கமாகும். அடிப்படை பாடத்திட்டத்தின் தற்போதைய திருத்தம், கட்டாயக் கல்வி அரசுப் பள்ளிகளுக்கான பாடத்திட்டம் 21 உடன் அடிப்படை பாடத்திட்டத்தை ஒத்திசைப்பதன் மூலம், கல்விக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. அதே நேரத்தில், HSK-ஆசிரியர்கள், HSK-ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பிற வெளிப்புற நிபுணர்களின் ஒத்துழைப்புடன் செய்யப்பட்ட மற்ற உள்ளடக்கம் சம்பந்தமான மற்றும் மொழி சம்பந்தமான மேம்பாடுகளை இந்தத் திருத்தம் கொண்டுள்ளது.

இந்த வெளியீட்டின் அமைப்பைப் பற்றி

இந்த அடிப்படை பாடத்திட்டம் கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளியின் பாடத்திட்டம் 21ஐ அடிப்படையாகக் கொண்டது. எனவே பாடத்திட்டம் 21 இல் உள்ள உரையின் தனிப்பட்ட பத்துகள் இந்த வெளியீட்டுக்காக அப்படியே நேரடியாகவோ அல்லது சற்றே மாற்றி அமைக்கப்பட்டோ எடுத்துக் கொள்ளப்பட்டது. அத்தியாயம் 1 அடிப்படை பாடத்திட்டத்தின் நோக்கத்தை விளக்குவதுடன், ஆரம்பம் முதல் இன்று வரை HSK-பாடங்களின் மேலோட்டத்தை வழங்குகிறது. அத்தியாயம் 2 அடிப்படைகளை விவரிக்கிறது, அத்தியாயம் 3 கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய புரிதலைக் கையாள்கிறது. அத்தியாயங்கள் 4 மற்றும் 5 «மொழிகள்» மற்றும் «இயற்கை, மனிதன், சமூகம்» ஆகிய இரண்டு பாடப் பகுதிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இதில் அவர்கள் முதலில் துறைகளின் முக்கியத்துவத்தை விவரிக்கிறார்கள், பின்னர் திறன் உள்ளிட்ட திறன்சார் பகுதிகளை வரையறுக்கிறார்கள். தனிப்பட்ட நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள் அல்லது HSK-ஆசிரியர்கள் திறன் மேம்பாட்டிற்கான வழிமுறைகளைத் தாங்களாகவே வடிவமைக்கின்றனர். எனவே அத்தியாயம் 6 தனிப்பட்ட சுழற்சிகள் பற்றிய பொதுவான கருத்தாய்வுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சொற்களஞ்சியம் (அத்தியாயம் 7) பெரும்பாலும் முந்தைய அடிப்படை பாடத்திட்டத்தின் சொற்களஞ்சியத்திலிருந்து எடுக்கப்பட்டள்ளது. EDK-வெளியீட்டின் «தாய் மொழிகள் மற்றும் கலாச்சாரங்களில் பாடங்கள்(HSK)» (ஆன்யா ஜூடிசி, ரெஜினா ஷ்ப்யூல்மன் 2014) சொற்களஞ்சியத்தின் அடிப்படையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த உரையில் *சாய்வு* எழுத்துக்களில் உள்ள அனைத்து சொற்களையும் இந்த சொற்களஞ்சியம் விளக்குகிறது. அவற்றில் மிக முக்கியமான வரையறைகள் பின்வருமாறு: HSK பாடங்களை கற்றுக்கொள்ளும் மொழி பெரும்பாலான குழந்தைகளுக்கு *முதல் மொழி*, ஆனால் சிலருக்கு இவை *இரண்டாவது மொழியாகும்.* இங்கு கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டம் HSK-பாடங்களை கற்பிக்கும் பள்ளி மொழியை *பூர்வீக மொழியாகக்* குறிப்பிடுகிறது.

இணைப்பு (அத்தியாயம் 8) சூரிச் மாகாணத்திலுள்ள HSK-பாடங்களுக்கான சட்டபூர்வ அடிப்படையையும் அதை நடைமுறைப்படுத்துவது பற்றிய பொதுக் கல்வி அலுவலகத்தின் குறிப்புகளையும் கொண்டுள்ளது. மேலும், ஒவ்வொரு நிலைக்கும் சாத்தியமான தலைப்பு களுக்கும் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரசுரங்களுக்கும் கண்ணோட்டம் இணைக்கப்பட்டுள்ளன.

FACE CLUB

1 அடிப்படை பாடத்திட்டத்தின் நோக்கம்

இந்த அடிப்படை பாடத்திட்டம் HSK- படிப்பின் நோக்கங்களை, *இருமொழி அல்லது பன்மொழி பேசும் குழந்தைகளின்* தற்போதைய தேவைகளின் மேல் கவனம் செலுத்துவதுடன் பாடத்திட்டம்-21 உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டின் நோக்கம் மூன்று மடங்கு:

முதலாவதாக HSK-நிதி உதவியளிக்கும் நிறுவனங்களால் இந்த அடிப்படை பாடத்திட்டம், தங்கள் சொந்த பாடத்திட்டத்தை மேலும் மேம்படுத்தவும் பாடத்திட்டம் 21 உடன் ஒருங்கிணைக்கவும் பயன்படுத்தப்படுகிறது.
இதில், தொடக்க நிலைகள் வேறுபட்டவை: புதிய பாடத்திட்டத்தை அமைக்கும் நிதியுதவி நிறுவனங்கள் அடிப்படை பாடத்திட்டத்தை தங்கள் பாடத்திட்டங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். மறுபுறம், அரசுப் நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள், இது சம்பத்தப்பட்ட *பூர்வீக நாடுகளின்* கல்வி அமைச்சகங்களால் வகுக்கப்பட்ட வழக்கமான பாடத்திட்டங்களை ஏற்கனவே கொண்டுள்ளன. தேவைப்பட்டால், இந்த பாடத்திட்டங்களின் உள்ளடக்கத்தை அவை HSK அடிப்படை பாடத்திட்டத்தின் இலக்குகள் மற்றும் உள்ளடக்கத்துடன் இணக்கமாக இருக்கும்படியும், அதனுடன் முரண்படாதபடியும் சரிசெய்கின்றன. அனைத்து நிதியுதவி நிறுவனங்களுக்கும், அடிப்படை பாடத்திட்டத்தின் தனிப்பட்ட திறன்களையும் பாட துறைகளையும் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப மதிப்பிட அவகாசம் உள்ளது.. அவர்களின் வகுப்புகளுக்கு வாரந்தோறும் இரண்டு முதல் நான்கு பாடங்கள் மட்டுமே இருப்பதாலும், வயது, முன் அறிவு, மற்றும் செயல்திறன் முன்னிட்டு பாடம் படிக்கும் குழுக்கள் பெரும்பாலும் வேறுபட்டதாக இருப்பதாலும், அவர்கள் முன்னுரிமைகளை அமைக்க வேண்டும்.

இரண்டாவதாக, கல்வித்துறையின் அடிப்படை பாடத் திட்டமானது, அவர்கள் படிப்புகளின் அங்கீகாரத்திற்காக அதன் HSK-நிதியுதவி விண்ணப்பத்தை சரிபார்க்க, அடித்தளமாக அமைகிறது.. நிதி உதவியளிக்கும் நிறுவனங்களிடமிருந்து வரும் பாடத்திட்டங்களில், அடிப்படை பாடத்திட்டதின் பாடங்களுடன் ஒத்துப் போகும் படிப்புகள் மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன. பூர்வீக நாட்டில் ஒரு பாடத்திட்டம் இருந்தால் அது மற்றும் HSK-அடிப்படை பாடத்திட்டம் எவ்வாறு ஒன்றாக பொருந்துகிறது மற்றும் பொருந்தாத நிலையில் அதற்கு என்ன செய்வது என்பதைப் பற்றி விளக்கப்பட வேண்டும்.
அங்கீகார செயல்பாட்டில் உள்ள இந்த செயல்முறை மூலம், அங்கீகரிக்கப்பட்ட HSK-படிப்புகள் கொண்ட நிதி உதவியளிக்கும் நிறுவனங்களுக்கு இந்த அடிப்படை பாடத்திட்டத்தைஅதிகாரப்பூரவமாக்குகிறது: இது அவர்களின் பாடத்திட்டத்தின் குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் உள்ளடக்கங்களை வரையறுக்க கூடிய மற்றும் பாடங்களுடன் இணைக்கக் கூடிய சட்டகத்தை வரையறுக்கிறது.

மூன்றாவதாக, அடிப்படை பாடத்திட்டம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் புரிந்துகொள்வதற்கான அடிப்படையாக செயல்படுகிறது: இது நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள், HSK ஆசிரியர்கள், உள்ளூர் மற்றும் மாகாண அதிகாரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு HSK பாடங்களின் நிபந்தனைகள், இலக்குகள், உள்ளடக்கம் மற்றும் விதிமுறைகளுக்கு பொதுவான அடிப்படையை வழங்குகிறது.

இந்த அடிப்படை பாடத்திட்டம் சூரிச் மாநிலத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. «பாடத்திட்டம் 21» என்பது சூரிச் பாடத்திட்டம் 21ஐக் குறிக்கிறது.

ஆரம்பம் முதல் இன்று வரை HSK-பாடங்கள்

முதல் HSK-படிப்புகள் 1930களில் இத்தாலியில் இருந்து அரசியல் அகதிகளின் முயற்சியில் சூரிச் மாகாணத்தில் அமைக்கப்பட்டன. வளர்ந்து வரும் இத்தாலிய குடியேற்றத்துடன், இந்த படிப்புகளின் எண்ணிக்கையும் சீராக அதிகரித்தது. 1960களின் பிற்பகுதியிலும் 1970களின் முற்பகுதியிலும், பிற நாடுகளைச் சேர்ந்த பெற்றோர் சங்கங்களும் இது போன்ற சலுகைகளை உருவாக்கின. படிப்படியாக அவர்களின் அமைப்பு அந்தந்த *பூர்வீக நாடுகளால்* எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜூன் 21, 1966 அன்று, வளர்ப்பு வாரியம் (இன்று கல்வி வாரியம்) இந்த விஷயத்தில் முதல் முடிவாக, ஒரு சோதனையின் அடிப்படையில், வகுப்பறைகளில் இத்தகைய படிப்புகளை நடத்த அனுமதித்தது. ஆரம்பத்தில், இது இத்தாலிய பாடங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது, மேலும், «வழக்கமான பள்ளி நேரங்களில்» இது அனுமதிக்கப்படவில்லை.

மே 16, 1972 இன் *தீர்மானத்தில்*, இத்தாலிய மற்றும் ஸ்பானிஷ் HSK-படிப்புகளை வழக்கமான பள்ளி

நேரங்களில் சேர்க்க பாடசாலைகளுக்கு கல்வி வாரியம் பயன்படுத்தி கொள்ள அனுமதித்தது .
அதே ஆண்டில், மாநிலக் கல்வி அமைச்சர்களின் சுவிஸ் மாநாடு (EDK) வழக்கமான பள்ளி நேரங்களில் இரண்டு HSK-பாடங்களை அனுமதிக்க பரிந்துரைத்தது.

1982 ஆம் ஆண்டில் இத்தாலிய மற்றும் ஸ்பானிய துணைத் தூதரகங்கள் மற்றும் «சூரிச் கன்டனிலுள்ள வெளிநாட்டுப் பெற்றோர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பு குழு» HSK-படிப்புகளை கான்டன் முழுவதும் பள்ளியில் நடக்கும் நடவடிக்கைகளாக சேர்க்கவும் HSK-மதிப்பெண்களை பள்ளிச் சான்றிதழில் அனுமதிக்குமாறும் கல்வி வாரியத்திற்குக் கோரிக்கை விடுத்தது.

நவம்பர் 8, 1983 இன் *தீர்மானத்துடன்*, கல்வி வாரியம் இந்த விருப்பங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, சோதனை அடிப்படையில் அனைத்து நாடுகளிலிருந்தும் சம்பத்தப்பட்ட படிப்புகளை அனுமதித்தது. இந்த புதிய ஒழுங்கு முறை பாடங்களை மேம்படுத்தி அவற்றை மேலும் பிரபலமாகச் செய்தது. அதே நேரத்தில், பாடநெறி வழங்குநர்கள், சூரிச் அரசுப் அதிகாரிகள் மற்றும் வழக்கமான பள்ளியின் ஆசிரியர்கள் மிகவும் ஒருங்கிணைந்த முறையில் இணைந்து பணியாற்றத் தொடங்கினர் (HSK விற்கு விசேஷித்த பாடத்திட்டங்கள் மற்றும் கல்விபுகட்டும் கருவிகள், மேல் படிப்பு, முன்னோடி திட்டம்). எட்டு வருட சோதனைக் கட்டத்தின் விளைவாக «பூர்வீக மொழி மற்றும் கலாச்சாரத்தில் படிப்புகளை நடத்துதல்» தொடர்பான விதிமுறைகளை 1992 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் தேதி கல்வி வாரியம் ஏற்றுக்கொண்டது. இந்தத் தீர்மானம் சூரிச் கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளியில் இக்கல்வி கற்பித்தலை நிலைநிறுத்துகிறது. இது முதன்முறையாக அரசுப சாரா நிதியுதவி நிறுவனங்களால் நடத்தப்படும் படிப்புகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. 2005 ஆம் ஆண்டின் கல்விக்கான அரசுப் பள்ளிச் சட்டத்திலும், 2006 ஆம் ஆண்டின் கல்விக்கான அரசுப் பள்ளி ஆணையிலும், HSK பாடங்கள் புதிய சட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டன.

1980களில், இத்தாலி மற்றும் ஸ்பெயினுடன், யூகோஸ்லாவியா, துருக்கி, கிரீஸ் மற்றும் போர்ச்சுகல் மட்டுமே HSK-பாடங்களை வழங்கின. பாடநெறி வழங்குநர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தது, இன்று 31 மொழிகளில் அங்கீகரிக்கப்பட்ட HSK-படிப்புகள் வழங்கப்படுகின்றன.

2009/10 கல்வியாண்டில் முதல் முறையாக பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 10,000ஐத் தாண்டியது. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை மொழியைப் பொறுத்து மாறுபடும். மேலும் இது மொழிக் குழுவின் அளவு, நிதியுதவியளிக்கும் நிறுவனத்தின் அமைப்பு ரீதியான மற்றும் நிதி நிலைமை, பூர்வீக நாட்டிலிருந்து ஆதரவு போன்ற பல்வேறு காரணிகளைப் பொறுத்தது.

HSK-பாடங்களில் மாறுபட்ட வடிவமைப்பு நிதி உதவி நிறுவனங்கள் மற்றும் மொழி சமூகங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைப் பிரதிபலிக்கிறது - எடுத்துக்காட்டாக கல்வி பற்றிய புரிதல், இடம்பெயர்வு (அ) சொந்த நாட்டிலிருந்து வெளியேறியதின் பின்னணி, காலம் காலமாக பெற்ற அனுபவம் அல்லது சுவிட்சர்லாந்தில் வாழ்க்கையின் நோக்கம் ஆகியவை இவற்றின் காரணங்கள்.

ஆரம்பத்தில், HSK-பாடங்கள் *பூர்வீக நாடுகளுக்கு* திரும்பும் பட்சத்தில், பள்ளியில் (மீண்டும்) சேர்வதற்கு எளிதாக்கும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருந்தன. காலப்போக்கில், மாணவர்களின் பின்னணி மாறவே, பாடத்தின் நோக்கமும் மாறியது: மாணவர்களில் மிகச் சிறிய பகுதியினர் மட்டுமே தங்கள் *பூர்வீக நாடுகளுக்குத்* திரும்பியதால், முதல் மற்றும் இரண்டாவது புலம்பெயர்ந்த தலைமுறையின் குழந்தைகளை உள்ளூர் சமூகத்துடன் *ஒருங்கிணைபவதற்காக* பாடங்களின் நோக்கம் மாறியது. *ஒருங்கிணைத்தல்* அல்லது «திரும்புதல்» ஆகிய இரண்டும் முக்கிய பிரச்சினைகள் அல்லாத இருதேசியம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுங்கூட வகுப்புகளில் கலந்து கொள்ளத் தொடங்கினர்.

அதே நேரத்தில், *பன்மொழி* வளர்ச்சி அல்லது பொருத்தமான *பூர்வீக மொழி*யின் ஊக்குவிப்பு ஆகியவை அனைத்து மாணவர்களுக்கும் ஒரு சுயாதீனமான மற்றும் மிக முக்கியமான குறிக்கோளாக நிறுவப்பட்டது. இந்த வழியில், பன்மொழி திறன் ஒரு ஆற்றலை உருவாக்குகிறது என்ற புரிதல் கல்வி நடைமுறை மற்றும் ஆராய்ச்சியிலிருந்து பாடங்களுக்குள் தடையின்றிச் செல்கிறது.. இதன் ஊக்குவிப்பின் மூலம் தனிநபர் மட்டுமல்ல ஒட்டு மொத்த சமுதாயமும் பயனடைகிறது.
சூரிச் மாநிலத்தில், கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளி மாணவர்களில் சுமார் 43% பேர் ஜெர்மன் மொழியைத் தவிர வேறு மொழியைத் தாய்மொழியாகப் பேசுகிறார்கள் (2020 ஆம் ஆண்டு நிலவரப்படி, சூரிச் மாநிலத்தின் கல்வி புள்ளிவிவரங்கள்). *பன்மொழியின்* இந்த திறனை ஊக்குவிப்பதும் பயன்படுத்துவதும் முக்கியம்.



2 கருத்து மற்றும் அடிப்படைகள்

கருத்து

தாய்மொழி மற்றும் *கலாச்சாரத்தில்* பாடங்கள் படிக்கும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் ஜெர்மன் அல்லாத தங்கள் *பூர்வீக மொழியில்* தங்கள் திறனை விரிவுபடுத்துகிறார்கள். இது *முதல்* அல்லது *இரண்டாவது மொழியைக்* குறிப்பிடுகிறது. மேலும், மாணவர்கள் *கலாச்சாரங்கள்* மற்றும் அவர்களின் வாழ்க்கை சூழல்கள், குறிப்பாக *கலாச்சாரம்*, வரலாறு, இலக்கியம், புவியியல் மற்றும் அவர்களின் குடும்ப பூர்வீகத்தின் பாரம்பரியங்கள் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் சூழ்நிலையைச் சமாளித்து, வெவ்வேறு சமூகங்களில் - அது சுவிட்சர்லாந்தாக இருந்தாலும் அல்லது தங்கள் *பூர்வீகமாக* இருந்தாலும் தங்களைத் தாங்களே நிலைநிறுத்தும் திறனை விரிவுபடுத்துகிறார்கள். அவர்களின் மொழியியல், அறிவாற்றல், சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சியில் இப் பாடங்கள் முழுமையான ஆதரவளிக்கின்றன.

சட்ட அடிப்படை தொடர்பான குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக, «தாய்மொழி மற்றும் கலாச்சாரம்» என்ற சொல் தற்போதைய பாடத்திட்டக் கட்டமைப்பில் தக்கவைக்கப்பட்டுள்ளது, இருப்பினும் இது நேரடி அர்த்தத்தில் துல்லியமாக இல்லை: இந்த வகுப்புகளில் கலந்துகொள்ளும் சிறுபான்மை குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு மட்டுமே அவர்களின் *பூர்வீக நாடுகள்* தெளிவாகவும் பிரத்தியேகமாகவும் அவர்களின் தாயகமாக அமைந்திருக்கிறது. இன்னுஞ் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், பெரும்பான்மையானவர்கள் சுவிட்சர்லாந்தில் பிறந்து வெவ்வேறு சூழல்களிலும் *கலாச்சாரங்களிலும்* நகர்கிறார்கள்.

வழிகாட்டும் கொள்கைகள்

– HSK-பாடங்கள் மாணவர்களை - அவர்களின் வயது, முந்தைய அறிவு மற்றும் செயல்திறன் நிலை ஆகியவற்றின் படி - அவர்களின் *பூர்வீக மொழியில்* ஆதரிக்கின்றன.

– பாடத்திட்டம் 21 இல் «அடிப்படைகள்» என்ற அத்தியாயத்தில், «கல்வி இலக்குகள்» என்பதன் கீழ் பள்ளிக்கான நோக்குநிலையாக வடிவமைக்கப்பட்ட மதிப்புகளுக்கு இப் பாடம் ஒத்திருக்கிறது, குறிப்பாக பின்வருவனவற்றுடன்:

- « அரசியல், மதங்கள் மற்றும் மதப் பிரிவுகள் தொடர்பான விஷயங்களில் பள்ளி நடுநிலை வகிக்கிறது.
- பள்ளி சம வாய்ப்புகளை ஊக்குவிக்கிறது.
- பள்ளி பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கிறது.
- பள்ளி அனைத்து வகையான பாகுபாடுகளையும் எதிர்க்கிறது.
- பள்ளி சமூக நீதி, ஜனநாயகம் மற்றும் இயற்கை சூழலைப் பாதுகாப்பது பற்றிய புரிதலை உருவாக்கவும் ஊக்குவிக்கவும் செய்கிறது.
- பள்ளி மற்ற மக்களுடன் ஒன்றாக வாழ்வதில் பரஸ்பர மரியாதையை ஊக்குவிக்கிறது, குறிப்பாக *கலாச்சாரங்கள்*, மதங்கள், வாழ்வு முறைகள்.
- குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு வெவ்வேறு கற்றல் தேவைகள் இருப்பதாக பள்ளி நம்புகிறது, மேலும் பன்முகத்தன்மையுடன் அதை ஆக்கபூர்வமாக கையாளுகிறது.
- பன்முக சமூகத்தில் சமூக ஒற்றுமையில் பள்ளி பங்களிக்கிறது.»

– இந்தப் பாடம், *இருமொழி* மற்றும் *பன்மொழி* திறன் மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய கூடுதல் திறமைகளை உருவாக்குகிறது எனும் விழிப்புணர்வை வலுப்படுத்துகிறது. இது பன்மொழித் திறமையை மதிக்கிறது மேலும் இதை நன்மையானதாகவும், நேர்மறையானதாகவும் புரிந்து கொள்கிறது.

– வெவ்வேறு தொடர்புகள், *கலாச்சாரங்கள்*, மரபுகள் மற்றும் கதைகளின் வழியாக பல்வேறு *அடையாள வழிமுறைகளைக்* கையாளுவதில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு பாடங்கள் துணை புரிகின்றன. *பூர்வீகம்* மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய இரு நாடுகளின் தனிப்பட்ட அனுபவங்களும், அறிவும் உள்வாங்கப்பட்டு, மேம்படுத்தப் பட்டு, பிரதிபலிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தார்மீக மதிப்புகள் மற்றும் விதிமுறைகள், வரலாறு அல்லது மதங்கள் இதில் அடங்கும். மறுபுறம், ஸ்தாபன மத போதனைகள் மற்றும் (கட்சி) அரசியல் சித்தாந்தங்களைப் போதிப்பது வகுப்பறையில் திட்டவட்டமாக இல்லை.

– மாணவர்களின் மோதலைச் சமாளிக்கும் திறன், அவர்களின் *கலாச்சார ஊடுருவல் திறன்கள்* மற்றும் தீர்மானிக்கும் திறன் ஆகியவற்றில் பாடங்கள் துணைபுரிகின்றன.

– கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளியில் *இடம்பெயர்வு பின்னணி*யைக் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களை *ஒருங்கிணைவதற்கு* இந்த பாடம் துணைபுரிகிறது.

– சுவிட்சர்லாந்திலும், அவர்களின் *பூர்வீக நாடுகளிலும்* - மாணவர்கள் தங்களுடைய *பன்மொழித் திறமை* மற்றும் *கலாச்சார ஊடுருவு திறன்களை* தங்கள் பிற்கால பயிற்சியிலும், தொழிலிலும் பயன்படுத்துவதற்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை இந்த பாடம் நிறைவேற்றுகிறது.

– சுவிட்சர்லாந்து மற்றும் *பூர்வீக நாடு*களில் உள்ள ஒரே மொழியைப் பேசும் மக்களுடன் தொடர்பு கொள்வதற்கு இந்தப் பாடம் மாணவர்களுக்கு உதவுகிறது.

– இந்தப் பாடம் மாணவர்கள் தங்கள் *பூர்வீக மொழியில்* வயதுக்கு ஏற்ற ஊடகங்களையும், பிரசுரங்களையும பயன்படுத்த உதவுகிறது.

– குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் அனுபவங்கள் மற்றும் ஆர்வங்களை பாடம் அனுமானிக்கிறது, மேலும் புதிய ஆர்வங்களை எழுப்புகிறது இது, பாடம் தொடர்பான விஷயங்களுடன் மாணவர்களை நேரடியாகத் தொடர்பு படுத்துகிறது, மேலும் வகுப்பறையில் மின்னணு ஊடகங்களின் பயன்பாடு (இணையதளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவை) மூலம் அவர்களின் சொந்த மொழி சார்ந்த நடவடிக்கைகளுடன் கற்றலை ஒருங்கிணைக்கிறது.
கற்றல் படிகள் மற்றும் பணிகள் தனிப்பட்ட மாணவர்களின் நிலைக்கு ஒத்திருக்கும்.

– பாடம் விளையாட்டுத்தனமான *கூறு*களுக்கும் வாய்வழித் தொடர்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. மழலையர் பள்ளியில் அணுகுமுறை, அடிப்படையில் விளையாட்டுத்தனமாக இருக்கிறது.

– மாணவர்கள் வெவ்வேறு மொழி மற்றும் *வாழ்க்கைச் சூழல்களில்* குறிப்பிட்ட அளவிற்கு நிலைமாறுகிற படியினால் ஏற்படும் வாய்ப்புகளைப் பாடங்கள் பயன்படுத்துகின்றன.

– எனவே இப்பாடங்கள் தொடர்ந்து மானவ மானவிகளின் தனிப்பட்ட அனுபவங்களை எடுத்துக் கொண்டு ஒப்பீட்டை ஒரு அறிவுறுத்துகிற செயல்முறைக்கொள்கையாக நிலைநிறுத்துகிறது. ஜெர்மன் மொழியுடன் *பூர்வீக மொழியை* ஒப்பிடுவதன் மூலமும், ஜெர்மன் மொழியின் பேச்சு வழக்குடன் உயர்தனி ஜெர்மன் மொழியை ஒப்பிடுவதன் மூலமும் மற்றும் *பூர்வீக மொழிகளின் இயல்புநிலை மாறுபாட்டை* ஒப்பிடுவதன் மூலமும் இந்தப் பாடங்கள் சம்பந்தப்பட்ட மொழிகளில் உள்ள திறன்களை மேம்படுத்துகின்றன. வெவ்வேறு *வாழ்க்கைச் சூழல்களை* ஒப்பிட்டுப் பார்ப்பது மூலம் இந்தப் பாடம் ஒற்றுமைகள், வேற்றுமைகள் மற்றும் முக்கியமான தனித்தன்மைகள் பற்றிய புரிதலை செறிவூட்டுகிறது.

ஆக்கம் மற்றும் அமைப்பு

HSK வின்அடிப்படை பாடத்திட்டமானது பாடத்திட்டம் 21 ஐ அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும், அதன் அமைப்பு மற்றும் துறைச்சொற்களை உட்கொண்டிருப்பதாலும் பாடத்திட்டம் 21ன் அமைப்பு சுருக்கமாக இங்கு விளக்கப்பட்டுள்ளது. மேலும் விரிவான விளக்கங்களை «கண்ணோட்டம்» மற்றும் «அடிப்படைகள்» என்ற அத்தியாயங்களில் காணலாம்.

பாடத்திட்டம் 21: சுழற்சிகள் மற்றும் கட்டமைப்பு

பாடத்திட்டம் 21 சுவிட்சர்லாந்தில் பதினோரு கட்டாயப் பள்ளி ஆண்டுகளை மூன்று சுழற்சிகளாகப் பிரிக்கிறது. முதல் சுழற்சி இரண்டு ஆண்டுகள் மழலையர் பள்ளி மற்றும் முதல் இரண்டு ஆண்டுகள் ஆரம்ப பள்ளியைக் (2 ஆம் வகுப்பு முடியும் வரை) கொண்டது. இரண்டாவது சுழற்சியில் நான்கு ஆண்டுகள் ஆரம்ப பள்ளி (3 முதல் 6 ஆம் வகுப்பு வரை) மற்றும் மூன்றாவது சுழற்சியில் மூன்று ஆண்டுகள் மேல்நிலைப் பள்ளி (7 முதல் 9 ஆம் வகுப்பு வரை) உள்ளது.

பாடத்திட்டம் 21 ஆறு பாடப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: மொழிகள்; கணிதம்; இயற்கை உலகம், மக்கள் மற்றும் சமூகம் (NMG); வடிவமைப்பு; இசை, உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு. ஒவ்வொரு பாடப் பகுதிக்கும், கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளியில் மாணவர்கள் பெறும் *திறன்கள்* விவரிக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய துறைகளான «ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்» மற்றும் «தொழில்முறை நோக்குநிலை» ஆகியவை அடங்கும். (தனிப்பட்ட, சமூக மற்றும் வழிமுறை) இடைநிலைத் திறன்கள் மற்றும் பலதுறைகளின் ஒருங்கிணைவு விஷயங்கள் நிலையான வளர்ச்சியின் (ESD) வழிகாட்டும் கொள்கையின் கீழ் பல்கலைக்கழகப் பாடத்தொகுதியிலும் கூறுநிலை பாடத்திட்டத்திலும் செயலாக்கப்படுகின்றன..

பாடத்திட்டம் 21: திறன் உருவாக்கம்

பாடத்திட்டம் 21 இன் தனிப்பட்ட பாடப் பகுதிகள் *திறன் பகுதிகளாக* பிரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக ஜெர்மன், ஆங்கிலம், இத்தாலியன் மற்றும் பிரஞ்சு ஆகிய பாடப்பகுதிகள் ஒவ்வொன்றும் «கேட்டல்» , «பேசுதல்» , «எழுதுதல்» , «மொழியில்/ மொழிகளில்கவனம்» மற்றும் «இலக்கியத்தில் கவனம்» (ஜெர்மன் பாடப் பகுதி) குறிப்பாக «கலாச்சாரங்களில் கவனம்» (ஆங்கிலம், இத்தாலியன், பிரெஞ்சு பாடப் பகுதி) என பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு *திறன்சார் பகுதியிலும்*, வெவ்வேறு *திறன்கள்* உருவாக்கப்பட்டு அவற்றின் அமைப்பு காட்டப்படுகிறது. ஒவ்வொரு திறனுக்கும், ஒரு சூழற்சியில் எதிர்பார்க்கப்படும் அறிவு மற்றும் திறன்களின் அமைப்பானது வெவ்வேறு நிலைகளில் விவரிக்கப்பட்டுள்ளது. இத் *திறன் நிலைகள்* ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் திறன்கள் தொடர்ந்து பெறப்பட்டது என்பதை வெளிப்படுத்துகின்றன.

HSK- அடிப்படை பாடத்திட்டம்: அமைப்பு

மற்றும் திறன் உருவாக்கம்

தனிப்பட்ட சூழற்சிகள் மற்றும் திறன் நிலைகளில் பெற வேண்டிய திறன்களின் பிரிப்பு இந்த அடிப்படை பாடத்திட்டத்தில் இல்லை. HSK-ஆசிரியர்கள் தங்கள் குறிப்பிட்ட பாடங்களைத் தயாரிக்கும் வகையில், குறிப்பிட்ட திறன்கள் மற்றும் இதற்கு சம்பந்தமான உள்ளடக்கத்தை தெளிவாக விவரிப்பது தனிப்பட்ட HSK-நிதி உதவியளிக்கும் நிறுவனங்களின் பணியாகும்.

3 கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய புரிதல்

படம் 1: திறன் பெறல் (ஒப்பீடு பாடத்திட்டம் 21, அத்தியாயம் «கற்றல மற்றும் கற்பித்தல் பற்றிய புரிதல்»).

திறன் சார் கற்பித்தல்

பாடத்திட்டம் 21 க்கு ஒப்பாக திறன்கள் மற்றும் திறன்களைக் கையகப்படுத்துதல் ஆகியவற்றை தாய்மொழி மற்றும் கலாச் சாரத்தை கற்பிக்கும் பாடங்கள் அடிப்படையாகக் கொண்டவை. பாடமற்றும் திறன் பகுதிகளில் மாணவர்கள் எந்த அறிவு மற்றும் எந்த திறன்கள் மற்றும் திறமைகளைப் பெற வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. திறன்கள் பல உள்ளடக்கம் சம்பந்தப்பட்ட மற்றும் செயல்முறை தொடர்பான அம்சங்களை உள்ளடக் குகிறது: திறமைகள், திறன்கள் மற்றும் அறிவு மட்டுமல்லாமல் விருப்பம், அணுகுமுறைகள் மற்றும் மனோபாவமும் கூட.
கடைசியாக விவரிக்கப்பட்டவை என்ன குறிப்பிடப்படுகிறதென்னவென்றால்,, கலாச்சாரம் தொடர்பான அம்சங்கள் மட் டுமல் லாமல் ,, எல்லாவற்றிற்கும் மேலாக சுயாதீனமான கற்றல், ஒத்துழைப்பு, ஊக்கம் மற்றும் செயல்பட விருப்பம் ஆகியவையாகும்.

பெறப்பட வேண்டிய திறன்கள் தொழில்நுட்பம் மற்றும் இடைநிலை இயல்புடையவை. தொழில்நுட்பத் திறன்கள் பாடம் சார்ந்த அறிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய திறமைகளையும் திறன்களையும் விவரிக்கின்றன. பலதுறை திறன்கள் ஒட்டுமொத்தமாகக் கற்றலுக்கு முக்கிய பங்கு வகிக்கும் அறிவு மற்றும் திறன்கள் எவைகளோ, அவைகளை தெளிவுபடுத் துகின்றன. இதற்கு, தனிப்பட்ட, சமூக மற்றும் முறைசார் திறன்கள் சேர் க்கப்படும்.

திறன் சார்ந்த கற்பித்தலில் பாடத் தின் உள்ளடக்கம் மாணவர் களுக் கு தாங்கள் விரும்பும் திறனை எப்படி பெறவும் வலுவாக் கவும் அவர் களுக் கு ஆற்றல் இருக் கிறதோ, அப்படியே தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆசிரியர் களால் கற்றுத்தருகிற வகையில் முறையாக வடிவமைக் கப் படுகிறது. HSK-

அடிப்படை பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் பொருட்களின் உதவியுடன், HSK-ஆசிரியர் எந்த பாடத்தின் உள்ளடக்கம் மற்றும் தலைப்புகள் மூலம் எந்த திறன் இலக்குகளை செயல்படுத்தலாம் என்று யோசிக்கிறார்கள். இதனடிப்படையில், கற்றல் சூழல்களையும், கற்பித்தல் அலகுகளையும் மாணவர்கள் பொருத்தமான திறன்களைப் பெறும் வகையில் வடிவமைக்கிறார்கள். பாடம் கற்கும் குழுவிலுள்ள பல்வேறுபட்ட தேவைகளின் மேல் இவர்கள் அதிக கவனம் செலுத்துகிறார்கள்.

திறன்சார் மதிப்பீடு

திறன் இலக்குகளை அடைவது தொடர்பான பின்னூட்டக் கலாச்சாரம் என்பது திறன் சார் கற்பித்தலின் ஒரு பகுதியாகும். ஆக்கபூர்வமான பின்னூட்டமானது கற்பித்தல் தரத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். மேலும் இது கற்பதற்கும் திறன் பெற்றுக்கொள்வதற்கும் உதவியாகஇருக்கிறது. மாணவர்கள் பயிற்சி பெற்று வளர்ந்து வரும் கட்டத்தில் (செயல்முறையுடன் கூடிய: அடுத்த வாய்ப்பில் எதை மேம்படுத்தலாம் என்பதற்கான ஆதரவு சார்ந்த குறிப்புகள்), மொத்தமாக (செயல்முறையை நிறைவேற்றுதல், சமநிலைப்படுத்துதல்) மற்றும் முன்கணிப்பு மூலம்(எதிர்காலம் சார்ந்தது: வெற்றிகரமான மேலும் கற்றலுக்கான முன்நிபந்தனைகள் உள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்) மதிப்பிடப்படுகிறார்கள்.

2 ஆம் வகுப்பிலிருந்து, மாணவர்கள் தங்கள் சாதனைகள் மற்றும் HSK-பாடங்களில் முன்னேற்றத்திற்காக ஒரு தரச்சான்றைப் பெறுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட HSK-பாடப்பிரிவுகளின் HSK-ஆசிரியர்கள் ஒவ்வொரு செமஸ்டர் முடிவிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் சான்றிதழ் படிவத்தில் இத் தரச்சான்றை உள்ளிடுகின்றனர். இதற்கு சம்பந்தமான வழக்கமான வகுப்பு ஆசிரியர், ஜூரிச் தொடக்கப் பள்ளியின் சான்றிதழுக்கு தரச்சான்றை இட மாற்றுகிறார். மழலையர் பள்ளி மற்றும் 1 ஆம் வகுப்பில், குழந்தைகள் எந்த மதிப்பெண்களையும் பெறுவதில்லை. ஆயினும், HSK ஆசிரியர்கள் பெற்றோருடன் நடத்தும் உரையாடலில் தங்கள் குழந்தை கல்வி கற்பதிலுள்ள முன்னேற்றத்தை குறித்து அவர்களுக்கு கருத்துக்களை வழங்க முடியும்

றைத் திறன்கள்

பலது

HSK வகுப்பில் ஒரு மாணவர் விரும்பிய திறன்களை எந்த அளவிற்கு அடைந்துள்ளார் மற்றும் கற்றல் முன்னேற்றம் என்ன என்பது பற்றிய தகவல்களைத் தரச்சான்றுகள் வழங்குகின்றன. HSK ஆசிரியர் தானாக முன்வந்து சான்றிதழில் திறமையின் தனிப்பட்ட பகுதிகளை மதிப்பீடு செய்யலாம். சுழற்சி 1மற்றும் 2இல்: கேட்டல், வாசித்தல், பேசுதல், எழுதுதல், மொழி / மொழிகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்படுகின்றது, இலக்கியத்தின் மீது , மற்றும் இயற்கை, மக்கள் மற்றும் சமூகம் (NMG) மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது. சுழற்சி 3 இல்: கேட்டல், வாசித்தல், பேசுதல், எழுதுதல், மொழி(கள்) மீது கவனம் செலுத்தப்படுகின்றது, இலக்கியத்தின் மீது மற்றும் இயற்கை, தொழில்நுட்பம் (NT) / பொருளாதாரம், தொழில் , வீட்டு நிர்வாகம்(WAH) / இடைவெளிகள், நேரம், சமூகங்கள் (RZG) / மதங்கள், கலாச்சாரம், நெறிமுறை (RKE) மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது.

தர நிர்ணயம் என்பது நிதியுதவியளிக்கும் நிறுவனங்களால் உருவாக்க ப்பட்ட அல்லது *பூர்வீக நாடுகளின்* கல்வி அமைச்சகங்களால் கொடுக்கப்பட்ட பாடத்திட்டங்களின் இலக்குகளை குறிக்கிறது, மேலும் அது தற்போதைய அடிப்படை பாடத்திட்டத்தின் திறன்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். இத் தரச்சான்றானது தொழில் முறை ஆற்றல்கள் மற்றும் திறன்களைப் பற்றிய அறிக்கையை அளிக்கிறதே தவிர நடத்தை, விடாமுயற்சி அல்லது நேரம் தவறாமை பற்றி அல்ல. ஆற்றலை மதிப்பிடும்போதும், தரச்சான்றை வழங்கும் போதும் சூரிச் கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளிகளில் உள்ள அதே தர நிர்ணய அளவுகோல் இதற்கும் பொருந்தும்.

வகுப்பில் ஒரு குழந்தை அல்லது இளைஞரின் ஒட்டுமொத்த செயல்திறனை இத் தரச்சான்று மதிப்பிடுகிறது. இத் தரச்சான்று முறையான தேர்வுகளின் செயல் திறனை பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் வகுப்பில் கவனிக்கப்பட்ட HSK-ஆசிரியருடைய தொழில்நுட்ப செயல் திறன்களையும் (எ.கா. வாய்மொழி அறிக்கைகள், கற்றல் செயல்முறையின் பார்வையீட்டுக் குறிப்புகள் போன்றவை) சேகரிக்கிறது. எனவே இது தனித்தனியாக கொடுக்கப்பட்ட தேர்வுகளின் சராசரி கணக்கீட்டின் முடிவு இல்லை.

கோரிக்கையின் பேரில், HSK ஆசிரியர்கள் மாணவ மாணவிகளை மதிப்பிடுவதில் (குறிப்பாக பள்ளி வாழ்க்கை முடிவுகள் தொடர்பாக) அந்தந்த வழக்கமான பள்ளி வகுப்பு ஆசிரியரை ஆதரிக்கின்றனர்.

வீட்டுப்பாடங்கள்

பொதுவாக, வீட்டுப்பாடம் வகுப்பறைக்கு வெளியே ஒரு பாடத்தைக் கையாள்வதற்கான வாய்ப்பை

வழங்குவதன் மூலம் பாடம் படிப்பதை ஆதரிக்க முடியும். பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் தங்கள் பெற்றோரின் நேரடி உதவியின்றி தங்கள் வீட்டுப்பாடங்களைச் செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், பெற்றோரின் பூர்வீக மொழித் திறன்களை சேர்த்துக்கொள்வது அர்த்தமுள்ளதாக இருக்கும் - உதாரணமாக உரையாடல் அல்லது விளையாட்டான வீட்டுப்பாடங்கள். மேலும் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் வகுப்பில் என்ன படிக்கிறார்கள் என்பதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோருடன் நல்ல ஒத்துழைப்பின் மூலம் இதை ஊக்குவிக்க முடியும், உதாரணமாக பெற்றோர்களுடன் மாலை நேர சந்திப்பு அல்லது பள்ளியை பார்வையிடுவதற்காக வருவதை ஊக்குவிக்கப்பட வேண்டும். வீட்டுப்பாடத்தை வழங்கும்போது, HSK-ஆசிரியர்கள் மாணவர்களின் தனிப்பட்ட திறன் மற்றும் வயதைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். இவ்வாறு அவர்கள் மாணவர்களுக்கு அதிக பளு அளிப்பதைத் தவிர்த்து, மாற்றி அமைக்கப்பட்ட சவால்களுடன் அவர்களை ஊக்குவிக்கிறார்கள்.

பயிற்று கருவிகள் மற்றும் கற்பித்தல் கருவிகள் பயிற்று கருவிகள் மற்றும் கற்பித்தல் கருவிகள் HSK-நிதி உதவியளிக்கும் நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மாணவ மாணவிகளின் வெவ்வேறு கற்றல் திறன்கள், திறன் இலக்குகள் மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலைகள் (*இருமொழி அல்லது பன்மொழி பேசும் திறன்*, இடம்பெயர்வு அனுபவம்) ஆகியவற்றை அவர்கள் கருத்தில் கொள்கிறார்கள். அவை அடிப்படை பாடத்திட்டத்தின் வேண்டுகோள்களுக்கு தங்களை நோக்குநிலைப்படுத்திக்கொள்வதன் மூலம், அவற்றை பூர்த்தி செய்ய உதவுகின்றன. பாரம்பரிய கற்பித்தல் கருவிகளுடன் (புத்தகங்கள், பணிப்புத்தகங்கள் போன்றவை) மற்ற மின்னணு ஊடகங்களும் (ஆன்லைனில் அணுகக் கூடிய திரைப்படங்கள், காட்சியுடன் கூடிய உரையாடல், சமூக ஊடகங்கள் போன்றவை) பயன்படுத்தப்பட வேண்டும்.

கற்பிக்கும் முறை விருப்பத் தேர்வு

கற்பிக்கும் கொள்கைகளின் மற்றும் இந்த அடிப்படை பாடத்திட்டதின் ஒரு பகுதியாக, பாடங்களை வடிவமைக்கும் போது HSK-ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் முறையை விருப்பத் தேர்வு செய்ய சுதந்திரம் உண்டு. குறிப்பிட்ட கற்பித்தல் சூழ்நிலைகளில் அந்தந்த திறன் இலக்குகள் மற்றும் உள்ளடக்கம் மற்றும் மாணவ மாணவி களுக்கும் தங்களுக்குமே மிகவும் பொருத்தமாக இருக்கக்கூடிய முறையை அவர்கள் தேர்வு செய்கிறார்கள். நேரடி அறிவுறுத்தல், கண்டுபிடிப்புடன் கற்றல், திட்டமிடப்பட்டுள்ள பணிகள், திட்ட பாடங்கள், கற்றல் கூட்டாண்மைகளில் வேலை போன்ற பலதரப்பட்ட முறையான அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதில் கவனமாக இருக்கிறார்கள்.

மாணவர் குழு பெரும்பாலும் வெவ்வேறு அறிவு நிலைகள் கொண்டவர்கள் என்பதை செயல்முறை தேர்வு கணக்கில் எடுத்துக்கொள்கிறது: அவர்கள் வெவ்வேறு பள்ளி வகுப்புகள் அல்லது பள்ளிகளைச் சேர்ந்தவர்கள், வித்தியாசமான வயதுகளையுடையவர்கள், வெவ்வேறு வாழ்க்கைப் பின்னணிகளைக் கொண்டுள்ளனர் மற்றும் அவர்களின் முதல் மற்றும் இரண்டாம் மொழிகளில் வெவ்வேறு மொழி நிலைகளில் உள்ளனர்.

பாடங்களின் நடுநிலைமை

HSK- பாடமானது, அரசியல் ரீதியாகவும், மத ரீதியாகவும் நடுநிலையானது. இது ஒரு பன்மைத்துவ உலக கண்ணோட்டத்தைக அனுமானிக்கிறது, மேலும் எல்லா அரசியல் மற்றும் தேசியவாத போதனைகளையும் கைவிடுகிறது.

பாடங்கள் வரலாற்று நிகழ்வுகளின் வெவ்வேறு விளக்கங்களை அலசி ஆராய்கின்றன (பாடத்திட்டம் 21 இல் «இடைவெளிகள், நேரங்கள், சமூகங்கள் பற்றிய பாடத்திட்டம் என்ற » அத்தியாயத்தை காண்க): வரலாற்று உண்மைகளைச் சரிபார்க்க முடியும். மறுபுறம், உண்மைகளுக்கு விளக்கம் நோக்குநிலைகள், இருப்பிடங்கள் மற்றும் ஆர்வங்களைப் பொறுத்தது.

HSK-பாடங்கள் மதத்தை பகுத்தறிந்து ஆராய்ந்தால் , அதன் குறிக்கோள் மதத்தைப் பற்றிய அறிவாக இருக்குமே அன்றி, ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையைக் குறித்து அறிக்கை செய்வதோ அல்லது மதச் செயல்களின் நிறைவேற்றுதலோ அல்ல. பாடமானது ஒரு பாரபட்சமற்ற திறந்த மனப்பான்மையுடன், மதங்கள் மற்றும் உலக கண்ணோட்டங்களுக்குப் பாகுபாடற்ற அணுகுமுறையை ஊக்குவிக்கின்றது (பாடத்திட்டம் 21இல் «நெறிமுறைகள், மதங்கள், சமூகம் பற்றிய அறிவுறு தகவல்» என்பதை காண்க).

உதாரணமாக, ஒரு நாட்டின் தேசிய கீதம் முன்வைக்கப்பட்டு, அதன் உள்ளடக்கம் பேசப்பட்டு, அது ஒரு

சரித்திரத் தகவலாக ஆழமாக மனதில் பதியும் போது பாடத்தின் நடுநிலைமை பூர்த்தி செய்யப்படுகிறது. மறுபுறம், ஒவ்வொரு பாடத்திற்கும் முன் தேசிய கீதம் ஒன்றாகப் பாடப்பட்டால், ஒருதலைப்பட்சமான தேசிய *அடையாளம்* ஊக்குவிக்கப்பட்டு, தேசியப் பெருமை உணர்வு உருவாகினால், பாடங்களின் நடுநிலைமை மீறப்படுகிறது.

4 «மொழிகள்» துறை

துறையின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்கள்

இயல்புநிலை மாறுபாடு மற்றும் மொழிப் பிரதிபலிப்பு

முடிந்தவரை, HSK பாடங்கள் சம்பந்தப்பட்ட மொழியின் இயல்புநிலை மாற்றுருவில் ல நடைபெறுகின்றன. இது இன்னும் சாத்தியமில்லாத இடங்களில், புரிந்துகொள்வதை உறுதிப்படுத்த, வட்டாரமொழி மாற்றுருமற்றும்/அல்லது ஜெர்மன் மொழியைபயன்படுத்தலாம். நபருக்கு நபர் பெரிதும் வேறுபட்டு, வட்டாரமொழி மாற்றுருக்களை கொண்டிருக்கக்கூடிய குழந்தைகளின் பூர்வீக மொழி அறிவை இப் பாடங்கள் சேர்த்துக்கொள்கின்றன.

பிராந்திய அளவிலான மொழி பயன்பாடு, எழுத்து மொழிக்கான அணுகல் மற்றும் *பூர்வீக நாடுகளின்* எழுத்து கலாச்சாரத்துடனான தொடர்பு ஆகியவற்றிற்கு இயல்புநிலை மாற்றுரு பற்றிய அறிவு இன்றியமையாதது. இலக்கணம் மற்றும் எழுத்துக்கலை கற்பித்தல், வயதுக்கு ஏற்ற மொழி பிரதிபலிப்பு வடிவம் மற்றும் மொழி ஒப்பீடு ஆகியவை இந்த நோக்கத்தை அடைய பயன்படுத்தப் படுகிறது. ஊக்கமளிக்கும் கற்றல் காரணிகளைப் பயன்படுத்தி மாணவர மாணவிகள் தங்கள் *பூர்வீக மொழியின்* பல்வேறு அம்சங்களைப் பற்றி சிந்திக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள் (எ.கா. வட்டாரமொழி கள் மற்றும் அவற்றின் வேறுபாடுகள், மொழியின் வளர்ச்சி, ஆங்கிலும் மற்ற அயல் மொழிச் சொற்கள், ஜெர்மன் மற்றும் பள்ளியில் கற்பிக்கப்படும் பிற மொழிகளுடனான அமைப்புசார்ந்த வேறுபாடுகள் மற்றும் ஒற்றுமைகள்).

சொற்களஞ்சியத்தில் பயிற்சி (சொற்றொடர் மற்றும் வாக்கிய மாதிரிகளை பயிற்றுவித்தல் போன்றவை) வெவ்வேறு சூழ்நிலைகளிலும் வெவ்வேறு விஷயங்களைப் பற்றியும் தங்களது கருத்துக்களைப் பொருத்தமாக வெளிப்படுத்த அவர்களுக்கு உதவுகிறது.

மாணவ மாணவிகள் அடிக்கடி பேச்சு மற்றும் எழுத்து மொழியை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை நேரடியாக உணர்கிறார்கள். HSK-ஆசிரியர்கள் அவர்களுடைய (மாணவர்களுடைய) பரிந்துரைகளை மற்றும் தற்போதைய நிகழ்வுகளை அதற்காக சேர்க்கிறார்கள் . தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கிய நூல்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவதன் மூலமும், வழக்கமான மற்றும் மரபுசார் புதிய ஊடகங்களில் உண்மையான, ஊக்கமளிக்கும் எழுத்து வாய்ப்புகள் மூலமாகவும் *பூர்வீக மொழியின் இயல்புநிலை மாற்றுருவில்* அவர்கள் ஆர்வத்தை ஊக்குவிக்கிறார்கள்.

பன்முகத்தன்மை

இந்தப் பாடங்கள் HSK-மாணவர்களின் பூர்வீக மொழித் திறன்கள், மிகவும் பன்முகத்தன்மை கொண்டதாக இருக்கக்கூடும் என்ற உண்மையைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. இது எ.கா. பேச்சுத் திறன், சொல்லகராதியின் அளவு, *பூர்வீக மொழியின் இயல்புநிலை மாற்றுருவுடன்* பரிச்சயம், வாசிப்பதிலும் எழுதுவதிலும் அனுபவம், இலக்கண மற்றும் எழுத்திலக்கணத் திறன்கள். இப் பன்முகத்தன்மையைப் போதுமான அளவில் கையாள்வதற்காக, முடிந்தவரை ஆசிரியர் பாடங்களையும் தேவைகளையும் தனிப்பயனாக்குகிறார் அல்லது வேறுபடுத்துகிறார்.

மொழி ஒப்பீடு

மொழித் தேவைகளைப் பொறுத்து, குழந்தைகள் மற்றும் இளைஞர்கள்- ஜெர்மன் மொழியோடும் பள்ளியில் கற்பிக்கப்படும் பிற அயல் மொழிகளுடன் தங்கள் சொந்த மொழியை ஒப்பிட்டு - தங்கள் மொழியியல் புரிதலையும், அவர்களின் மொழியியல் விழிப்புணர்வையும் (மொழி விழிப்புணர்வு) விரிவுபடுத்துகிறார்கள். அவர்களின் *பூர்வீக மொழிக்கும்* ஜெர்மன் மொழிக்கும் அல்லது பள்ளியில் கற்பிக்கப்படும் அல்லது பேசப்படும் பிற மொழி களுக்கும் இடையிலான ஒப்புமைகள் மற்றும் வேறுபாடுகள் பற்றிய புரிதல் மூலம் அவர்கள் நோக்குநிலை மற்றும் பாதுகாப்பைப் பெற உதவுகிறது. இம் மொழி ஒப்பீட்டுத் திட்டங்கள், அவர்களின் வழக்கமான பள்ளி வகுப்பு ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் போது, அவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பல்துறை மற்றும் துறைசார் மொழித் திறன்கள்

தங்கள் *பூர்வீக மொழியில்*, மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் இருந்து அறிந்து கொண்ட அடிப்படைத் தகவல்தொடர்பு திறன்களை விரிவுபடுத்துவது மட்டுமல்லாமல், பல்வேறுபட்ட வாசகங்கள் மற்றும் பள்ளியின் திறன்அறி கல்விக்கு முக்கியமான பல்துறை மற்றும் துறைசார் மொழித் திறன்களைப் பெறுகிறார்கள். பல்துறை மொழித்திறன்கள் சிக்கலான மற்றும் கடினமான உண்மை நிலைகளைப் புரிந்து கொள்வதற்கும் கருத்துக்களை ஒழுங்குபடுத்துவதற்கும், காரணி அடிப்படையிலான தொடர்புகளை அடையாளம் காண அல்லது ஒருவரின் சொந்த உரையை கட்டமைக்க உதவுகிறது. துறைசார் மொழித் திறன்களில் தொழில்நுட்பச் சொற்கள், கருத்துகள் மற்றும் சில பாடப் பகுதிகளை வகைப்படுத்தும் சூத்திரங்கள் ஆகியவை அடங்கும்.

கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளியில் அனைத்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு ஜெர்மன் மற்றும் லத்தீன் எழுத்துக்கள் கற்பிக்கப்படுகிறது. மேலும், HSK-பாடங்களில் மாணவர்கள் தங்கள் *பூர்வீக மொழியில்* எழுத்துக்களையும் கற்கிறார்கள். முற்றிலும் மாறுபட்ட எழுத்துக்கள் அங்கு கற்றுக் கொள்ளப்பட்டால், இரண்டு கற்றல் செயல்முறைகளும் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று சுயாதீனமானவை, மேலும் அவை நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட வேண்டியதில்லை. ஆனால், லத்தீன், கிரேக்கம் அல்லது சிரிலிக் எழுத்துக்கள் HSK-பாடங்களில் கற்றுக் கொள்ளப்பட்டால், HSK-ஆசிரியர் கற்றல் செயல்முறைகளில் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக கட்டாய கல்விக்கான பள்ளியில் ஜெர்மன் கல்வியறிவைச் சேர்க்க வேண்டும். ஜெர்மன் எழுத்துக்களின் வேறுபாடுகளை அவர்கள் அறிந்திருக்க வேண்டும் மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். ஒரே நேரத்தில் இரு மொழிகளிலும் அறிமுகம் நடந்தால் (இருமொழிக் கல்வியறிவு), சம்பந்தப்பட்ட குழந்தைகளின் வழக்கமான வகுப்புகளில் கல்வியறிவின் நிலை மற்றும் முறைகளைப் பற்றி அவர்கள் கண்டறிவர்.

பன்மொழி கற்பிக்கின்ற கலை

HSK-பள்ளிகளில் வழக்கமான பள்ளிகளில் உள்ள மொழிப் பாடங்களைப் போலவே, பாடங்களிலும் முழுமையான *இருமொழி அல்லது பன்மொழிப் புலமையை* பெறுவது நோக்கம் அல்ல, மாறாக *செயல்பாட்டுப் பன்மொழிக்கான பயிற்சி* மட்டுமே. பாடத்திட்டம் 21இன் «மொழிகள்» என்ற அத்தியாயத்தின் கற்பித்தல் விதிமுறைகள் இதன் பொருள் என்ன என்பதைக் கூறுகின்றன: «செயல்பாட்டு பன்மொழித் திறன் *என்பது* வெவ்வேறு சூழ்நிலைகளில் *மொழியைக்கொண்டு* வெற்றிகரமாகச் செயல்படும் வகையில், பல்வேறு திறன்கள் அல்லது மொழிகளில் பல்வேறு மேம்பட்ட திறன்களைக் கொண்ட ஒரு மாறுபட்ட, ஆற்றல்மிக்க திறமைக்குப் பாடுபடுகிறது. ஒரு மொழியை கற்கும் போது மாணவர்கள் தங்கள் ஏற்கனவே கற்றுக் கொண்டவற்றைத் திரும்பப் பெறுகிறார்கள், இதனால் தங்கள் மொழியின் மூலவளங்களை திறமையாக விரிவுபடுத்துகிறார்கள்».

ஒரு பன்மொழி மூலவளமானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைக் கொண்டுள்ளது, அவை வெவ்வேறு களங்களில் (எ.கா. பள்ளி, ஓய்வு நேரம், குடும்பம்) வித்தியாசமான வடிவத்தைப் பெறுகிறது. மேலும் தங்களுடன் உரையாடுபவர் அல்லது சூழலைப் பொருத்து பயன்படுத்தப்படுகிறது. ஏதேனும் ஒரு மொழி பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்துகிறது, மேலும் மாணவர்களால் மிகவும் திறமையாக, விரும்பப்பட்டு மற்றும் மற்ற மொழி(கள்)ஐ விட அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது, இருப்பின் இந்த ஆதிக்கம் காலப்போக்கில் மாறலாம். பல சந்தர்ப்பங்களில், பள்ளி நுழைவு வரை, பூர்வீக மொழி அல்லது குடும்ப மொழி ஆதிக்கம் செலுத்துகிறது, அதே சமயம் மாணவர்களுக்கு பள்ளிக் காலங்களில், ஜெர்மன் மொழி படிப்படியாக அதிக முக்கியத்துவம் பெறுகிறது, போகப்போக ஒருவேளை ஆதிக்கம் கூட செலுத்தலாம். பொதுவாக பன்மொழி மக்கள் தங்கள் மொழிகளையும் மொழிக்களங்களையும் முற்றிலும் தனித்தனியாக பிரித்து வைத்திருப்பதில்லை. மாறாக அவர்களின் முழு மொழியியல் மூலவளங்களையும் உபயோகம் செய்து, தங்கள் மொழிகளை சூலோபாயமாகவும் நெகிழ்வுடனும் பயன்படுத்துகிறார்கள்.

பூர்வீக மொழிக்கும் (சுவிஸ்) ஜெர்மன் மொழிக்கும் இடையே உள்ள «மொழிக் கலவைகள்», அவை அடிக்கடி கவனிக்கப்படுவதால், திட்டவட்டமாகத் தடுக்கப்படவும் தவிர்க்கப்படவும் கூடாது. இவை இரண்டு மொழிகளில் மற்றும் மொழிகளுக்கு இடையில் வளரும் சூழ்நிலைக்கு ஒத்திருக்கிறது, மேலும் பல்வேறு விஷயங்களில் (எ.கா. புரிந்து கொள்வதற்கான உதவியாக, இடைவெளிகளை இணைக்கும் பாலமாக, ஒரு விளையாட்டான செயல்பாடாக) பயனுள்ளதாக இருக்கும் (புத்தகம் «வட்டார வழக்கு மற்றும் உயர்தனி மொழியைக் கையாளுதல்» ஐ காண்க) பாரம்பரிய மொழி கற்பித்தலுக்கான அடுக்கடுக்கான கற்பித்தல் பொருட்கள், மையம் IPE, கல்வி பல்கலைக்கழகம் சூரிச்).

திறன்சார் பகுதிகள்
திறன்சார் துறைகள் பற்றிய ஆரம்பக் குறிப்புகள்

பின்வரும் திறன்சார் துறைகள் மற்றும் திறன்கள் பாடத்திட்டம் 21 இலிருந்து வரையப்பட்டுள்ளன. நிச்சயமாக, இதில் உள்ள சொற்றொடர்கள் *பூர்வீக மொழியில்* உள்ள திறன்களைக் குறிக்கின்றன.

குறிப்பிட்ட திறன்கள் மற்றும் அதற்கு சம்பந்தமான உள்ளடக்கத்தை வரையறுத்தல் (சுழற்சிகள் மற்றும் திறன் நிலைபடிகளின் அடிப்படையிலான பிரிவு,) தனிப்பட்ட HSK நிதியுதவி நிறுவனங்களின் பணியாகும்.

கேட்டல்

– மாணவ மாணவிகள் கேட்கும் பொருட்களிலிருந்து முக்கியமான தகவல்களைப் பெறலாம்.
– மாணவ மாணவிகள் உரையாடல்களைப் பின்பற்றித் தங்கள் கவனத்தைக் செலுத்தலாம்.

– மாணவ மாணவிகள் சொல்லப்பட்டவற்றிலிருந்து தகவல்களைச் சேகரிக்க முடியும்.

பேசுதல்

– மாணவ மாணவிகள் தங்கள் பேச்சுத் இயக்கு திறன்கள், உச்சரிப்பு மற்றும் குரல் கட்டுப்பாடு ஆகியவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தலாம். ஓரளவு சரளமாகப் பேசுவதற்கு அவர்கள் தங்கள் வளரும் சொற்களஞ்சியம் மற்றும் வாக்கிய முறைகளைச் செயல்படுத்தலாம்; இன்னும் அதிகமாக அவர்களது *பூர்வீக மொழியின்* இயல்புநிலை மாற்றுருவிலும் இதை செய்யலாம்.

– மாணவ மாணவிகள் ஒரு உரையாடலில் தீவிரமாகப் பங்கேற்கலாம் மற்றும் உரையாடலைத் தொடங்கலாம்.

– மாணவ மாணவிகள் தனியாகப் பேசக்கூடிய சூழ்நிலைகளில் தங்களை ஓரளவு புரிந்து கொள்ளக் கூடிய வகையில் வெளிப்படுத்தலாம் (எ.கா. விளக்கக்காட்சி வழங்குதல், கவிதையைப் படித்தல், ...)..

– மாணவர்கள் அவர்களின் பேச்சு, விளக்கக்காட்சி மற்றும் உரையாடல் நடத்தை ஆகியவற்றைப் பிரதிபலிக்க முடியும்.

– **வாசித்தல்** மாணவ மாணவிகளுக்கு தங்கள் *பூர்வீக மொழியில்* அடிப்படை படிப்புத் திறன் உண்டு.

– மாணவர்களால் தங்கள் வயதுக்கு மற்றும் தேவைகளுக்கு ஏற்ற தகவல் அளிக்கும் நூல்களிலிருந்து முக்கியமான தகவல்களைப் பிரித்தெடுக்க முடியும்.

– மாணவர்களால் தங்கள் வயதுக்கு மற்றும் தேவைகளுக்கு ஏற்ற இலக்கிய நூல்களைப் படிக்கவும், விவாதிக்கவும் மற்றும் அவர்களின் வாசிப்பு உத்தியை வளர்த்துக்கொள்ளவும் முடியும்.

– மாணவர்களால் தங்கள் படிக்கும் பழக்கம் மற்றும் ஆர்வங்களைப் பிரதிபலிக்க முடியும்.

எழுதுதல்

– மாணவர்களால் தங்கள் வயது மற்றும் தேவைகளுக்கு ஏற்ற வகையில் *தங்கள் பூர்வீக மொழியில்* எழுத்துப்பூர்வமாக தங்களை வெளிப்படுத்த முடியும். இயல்புநிலை மாற்றுருவில் உள்ள அதிகப்படியான பா உத்தரவாதமும் இதில் அடங்கும். எடுத்துக்காட்டாக அவர்கள் பரந்த அளவிலான வாக்கிய வடிவங்களையும் மற்றும் போதுமான சொற்களஞ்சியத்தையும் கொண்டுள்ளனர்.
– மாணவ மாணவிகள் பலவிதமான வாசக வடிவங்களை நன்கு அறிந்திருக்கிறார்கள், மேலும் கட்டமைப்பு, உள்ளடக்கம், மொழி மற்றும் வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில், அவர்களின் எழுத்து இலக்குகளுக்கு ஏற்ப, தங்கள் சொந்த வாசக உரையை தயாரிக்க அவற்றைப் பயன்படுத்தலாம்.

– வயதுக்கு ஏற்ற தகவல், அறிவுறுத்தல்கள் மற்றும் மாதிரிகள் ஆகியவற்றின் அடிப்படையில், மாணவ மாணவிகள் தங்கள் உரைகளை அர்த்தமுள்ள மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அமைக்க முடியும்.

– மாணவர்களால் அவர்களின் தேவைகள் மற்றும் வயதைப் பொருத்து, தங்களின் உரைகளை உயர்தனி மொழியில் முறையாக, முடிந்தவரை சரியாக வடிவமைக்க முடியும்.

– மாணவர்களால் அவர்களின் எழுதும் செயல்முறை மற்றும் எழுத்துக்களைப் பற்றிச் சிந்திக்கவும், அவற்றின் தரத்தை மதிப்பிடவும் முடியும்.

மொழி(கள்) மீது கவனத்தை ஒருமுகப்படுத்துதல்

- பொருத்தமான கேள்விகள் மற்றும் பயிற்சிப் பணிகளைப் பயன்படுத்தி மாணவ மாணவிகள் தங்கள் *பூர்வீக மொழி*யைப் பற்றிச் சிந்திக்கிறார்கள் (எடுத்துக்காட்டாக இலக்கண பாலினம், பன்மை மற்றும் கால உருவாக்கம், பேச்சு வழக்கு, வரலாறு போன்றவை ஜெர்மன் மற்றும் பள்ளியில் கற்பிக்கப்படும் அல்லது பேசப்படும் பிற மொழிகளுடனான ஒப்பீடுகள், *பூர்வீக மொழி*யின் (*மொழி விழிப்புணர்வு/ language awareness*)) தனித்தன்மையைக் கண்டறியவும், அங்கீகரிக்கவும் உதவுகின்றன.

- மாணவ மாணவிகள் மொழியின் பயன்பாட்டையும் விளைவையும் ஆய்வு செய்யலாம்.

- மாணவ மாணவிகளுக்கு ஒரு பள்ளி ஆண்டு முழுவதிலுமாகக் உருவாக்க ப்பட்ட மற்றும் பயிற்சி செய்யப்பட்ட இலக்கண மற்றும் எழுத்திலக்கண அறிவு உண்டு.

இலக்கியத்தின் மீது கவனத்தை ஒருமுகப்படுத்துதல்

- மாணவ மாணவிகள் தங்கள் *பூர்வீகக் கலாச்சாரத்திலிருந்து*, வயதுக்கு ஏற்ற இலக்கிய நூல்களை (மழலையர் பாடல்கள், பாடல் வரிகள், உரைநடை, கவிதைகள், வாய்வழிக் கதைகள் போன்றவை) அறிவார்கள்.

- மாணவ மாணவிகள் இந்த நூல்களைப் பற்றியும் அதன் புரிதலைப் பற்றியும் உரையாடலாம்.

- மாணவ மாணவிகள் தங்கள் பூர்வீக நாடுகளின் இலக்கியம் (வரலாறு, முக்கிய நபர்கள், முதலியன) பற்றிய அறிவைக் கொண்டுள்ளனர்.

- மாணவ மாணவிகள்களால் வெவ்வேறு மொழிகள் மற்றும் கலாச்சாரங்களில் இருந்து கருப்பொருளுடன் தொடர்புடைய உரைகளை ஒப்பிட முடியும்.

- ஒரு அழகியல் விளைவை அடைவதற்காக இலக்கிய நூல்கள், உள்ளடக்கம், வடிவம் மற்றும் மொழி ஆகியவற்றின் அடிப்படையில் உணர்வுபூர்வமாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை மாணவர்கள் உணர்ந்து, அங்கீகரித்து, பிரதிபலிக்கிறார்கள். மாணவர்கள் இலக்கிய பிரிவு மற்றும் வகைகளின் முக்கிய பண்புகளை அறிகிறார்கள்.

5 «இயற்கை, மனிதன், சமூகம்» துறை

ஆரம்ப குறிப்புகள்
இயற்கை, மனிதன், சமூகம் (NMG) என்ற பாடம் இயற்கை மற்றும் தொழில்நுட்பம் (NT), பொருளாதாரம், வேலை, வீடு (WAH), இடங்கள், நேரம், சமூகங்கள் (RZG) மற்றும் மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள் (RKE) ஆகிய நான்கு முன்னோக்குகளை உள்ளடக்குகிறது. முதல் மற்றும் இரண்டாவது சுழற்சியில், நான்கு வெவ்வேறு உள்ளடக்கம் தொடர்பான முன்னோக்குகள் ஒரு துறையில் சுருக்கிக்கூற பட்டுள்ளன. எனவே, இயற்கை, மனிதன், சமூகம் ஆகியவை ஒன்று முதல் மூன்றாவது சுழற்சி வரையிலான முழு பாடப் பகுதியையும், முதல் மற்றும் இரண்டாவது சுழற்சியில் துறை பாடத்திட்டத்தையும் குறிக்கப் பயன்படுகின்றன. மூன்றாவது சுழற்சியில், குறிப்பிட்ட பாடப் பகுதிகளில் நான்கு முன்னோக்குகள் காண்பிக்க ப் படுகின்றன.

துறையின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்கள்
வெவ்வேறு *கலாச்சார* பின்னணியில் உள்ளவர்களுடன் மரியாதையுடன் ஒன்றிணைந்து வாழ்வதிலும், சமரச பேச்சுவார்த்தை நடத்துவதிலும், மோதல்களை அமைதியான முறையில் தீர்ப்பதிலும் மாணவ மாணவிகள் தங்கள் திறமைகளை விரிவுபடுத்துகிறார்கள். பாரபட்சமற்ற மற்றும் பிரதிபலித்த ஒப்பீடு இந்த *கலாச்சாரத்* திறன்களுக்கு பங்களிக்கிறது - அது வெவ்வேறு பூர்வீகங்கள், பேச்சுவழக்குகள், மொழிகள் மற்றும் மதங்களுக்கு இடையில் இருந்தாலும் சரி, அது *பூர்வீக நாடுகளுக்கும்* சுவிட்சர்லாந்திற்கும் இடையில் இருந்தாலும் சரி அல்லது *பூர்வீக நாடுகளுக்கும்* பிற நாடுகளுக்கு இடையில் இருந்தாலும் சரி. பாடங்கள் ஒரு திறந்த, சகிப்புத்தன்மை மனப்பான்மையை ஊக்குவிக்கின்றன. இது ஒப்பீடுகளைக் கொண்டு எதையும் ஒரே மாதிரியானவைகளாக தவறாக நினைப்பதையோ பாகுபாடு காட்டுவதையோ தவிர்க்கிறது. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட குழந்தையானது ஒரு குறிப்பிட்ட மதம், இனக்குழு அல்லது மொழியின் பிரதிநிதியாக ஒருபோதும் புரிந்துகொள்ளப்படக்கூடாது.

HSK-பாடங்களில், மாணவர்கள் *இருமொழி அல்லது பன்மொழி* குழந்தைகளாக மற்றும் இளைஞர்களாக, புலம்பெயர்ந்த அல்லது *பன்மொழி* குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக தங்கள் நிலைமையைக் கையாள்கின்றனர். கற்றல் குழுவில் ஒரு பிணைப்பாக அதே *பூர்வீகமொழியை* அவர்கள் உணர்கிறார்கள். அவர்களின் தனிப்பட்ட அனுபவங்களும், அவர்கள் *பூர்வீக நாடு*களுடனான உறவுகளும் வேறுபட்டவை. பாடங்கள் ஒரே பூர்வீக நாட்டிற்குள் சமய சார்பு, உலகக் கண்ணோட்டம், சமூக நிலை, மொழி (*மொழிவழக்கு மாறுபாடுகள், பன்மொழி*) மற்றும் உள்ளூர் புவியியல் ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்கின்றன.

பாடம், சுவிட்சர்லாந்து மற்றும் *பூர்வீக நாடு*களிலிருந்து தார்மீக மதிப்புகளைக் கையாள்கிறது. மாணவர்கள் பன்முகத்தன்மை தொடர்பாக தங்கள் சொந்த மதிப்புகளை, ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை அறிந்துகொள்வதன் மூலம், தெளிவுபடுத்துகிறார்கள். இந்தச் செயல்முறை பல்வேறு குறிப்பு அமைப்புகளை ஒருங்கிணைக்கும் ஒரு தனிப்பட்ட ஆளுமை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. அதே சமயம் மாணவ மாணவிகளின் தன்னம்பிக்கையையும் வலுப்படுத்துகிறது.

பாடங்கள் நிபுணத்துவம் வாய்ந்த விவகாரங்களைக் கையாள்கின்றன மற்றும் பல்வேறு கலாச்சாரங்களை பற்றி ஆழமாக புரிந்து கொள்ள செய்கிறது.. குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் குறுக்கு இணைப்புகள் மற்றும் ஒப்பீடுகள் செய்யப்படலாம்.

புலம்பெயர்தல் மற்றும் குடியேற்றத்திலிருந்து எழும் அனுபவங்களை இப் பாடங்கள் பிரதிபலிக்கின்றன; இவ் வனுபவங்கள் *வெவ்வேறு கலாச்சாரங்களுக்கு இடையிலே இருக்கும் சமூகத்தின்* அன்றாட சகவாழ்வைப் பாதிக்கின்றன..

மாணவ மாணவிகள், மிகச்சிறந்த முன்மாதிரிகள் மூலம் *பூர்வீக நாடு*களின் வரலாறு மற்றும் புவியியல் பற்றி அறிந்து கொள்கிறார்கள். அவர்கள் *பூர்வீக நாடு*களிலும் சுவிட்சர்லாந்திலும் இன்றைய வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகளை ஏற்படுத்துகிறார்கள்.

சிறப்புப்பாடங்களில், மாணவ மாணவிகள் புதிய சொற்களைக் கற்றுக்கொள்கிறார்கள், அவை அறிவைக் கட்டமைக்கும் தொகுதிகளாகப் பெறுகின்றனர், அதே நேரத்தில் அவை அவர்களின் மொழித் திறனை விரிவுபடுத்துகின்றன. ஒவ்வொரு பாடத்திற்கும் தேவையான சொற்களஞ்சியம் மற்றும் சிறப்பு சொற்களஞ்சியத்தை, குறிப்பாகவும் வெளிப்படையாகவும் வழங்குவதற்கும், பயிற்சி செய்வதற்கும் ஆசிரியருக்கு அதிக மொழி விழிப்புணர்வு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திறன்சார் பகுதிகள்

திறன்சார் பகுதிகள் பற்றிய ஆரம்பக் குறிப்புகள்

பின்வரும் திறன்கள் குறிப்பாக HSK-கற்பித்தலை கருத்தில் கொண்டு, அதற்கேற்ப உருவாக்கப்பட்டன. HSK-பாடங்களின் சிறப்பு அம்சங்களைக் குறிப்பிடுவதை இது உறுதி செய்கிறது. பாடத்திட்டம்-21இன் திறன் உருவாக்கத்திலும் அடிப்படை வழிகாட்டும் கொள்கைகளைக் காணலாம். பின்வரும் பட்டியலில், HSK பாடங்களில் குறிப்பிட்ட செயலாக்கங்கள், பாடத்திட்டம் 21ன் தொடர்புடைய திறன் விளக்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆயினும், இயற்கை, மனிதன், சமூகம் (NMG, சுழற்சிகள் 1 மற்றும் 2) மற்றும் 3 வது சுழற்சியில் மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள் (RKE) மற்றும் இடைவெளிகள், நேரங்கள், சமூகங்கள் (RZG) மற்றும் பொருளாதாரம், வேலை, குடும்பம் (WAH) மற்றும் இயற்கை மற்றும் தொழில்நுட்பம் (NT) ஆகிய பாடப் பகுதியிகளில் கூடுதல் ஆய்வு அர்த்தமுள்ளதாக இருக்கும். மொழித் துறையைப் போலவே, கட்டாயப் பள்ளிக் கல்வியின் முடிவிலும் மாணவர்கள் திறன்களைப் பெற்றிருக்க வேண்டும்.

இயற்கை, மனிதன், சமூகம் –
மதங்கள், கலாச்சாரங்கள்,
நெறிமுறைகள்

– மாணவர்களால் மற்றவர்கள் பேசுவதைக் கேட்டறியவும், உணர்ச்சிகளை உணரவும், மற்றவர்களுக்கு பதிலளிக்கவும் முடியும். அவர்கள் தங்களைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் தாங்கள் வைத்திருக்கும் பிம்பத்தை அவ்வப்போது மறுபரிசீலனை செய்கிறார்கள்.

பாடத்திட்டம் 21இன் உடனான இணைப்பு
NMG.10: « சமூகம் மற்றும் சமுதாயம் - சகவாழ்வு வடிவமைப்பு மற்றும் ஈடுபாடு»

RKE.5: «நானும் சமூகமும் – வாழ்க்கை வடிவமைப்பு மற்றும் ஒன்றிணைந்து வாழ்வதல்»

– அவர்கள் தங்கள் சொந்த நாடுகளிலும் சுவிட்சர்லாந்திலும் உள்ள வெவ்வேறு வாழ்க்கை முறைகளை நன்கு நிறுவப்பட்ட விதத்தில் கையாளுகிறார்கள் மற்றும் அவர்களுக்குள் ஒரு திறந்த மனப்பாண்மையை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு வாழ்க்கைச் சூழல்களில் அவர்களின் உரிமை உணர்வுகளைப் பிரதிபலிக்க அவர்கள் வெவ்வேறு வாழ்க்கைச் சூழல்களில் அவர்களின் உரிமை உணர்வுகளைப் பிரதிபலிக்கவும், அதை அவர்களது ஆளுமையில் ஒருங்கிணைக்கவும் முடியும். வேறுபட்ட விஉண்மைத்தன்மைகளைக் கையாள்வதற்கான ஆக்கபூர்வமான வழியை அவர்கள் கண்டறிகிறார்கள்.

பரஸ்பரமாக ஒருவரையொருவர் கருத்தில் கொள்ளதல்,, விதிகளுக்கு இணங்குதல் ஆகியவை மனித சகவாழ்வில் அவசியம் என்பதை மாணவ மாணவிகள்கள் அடையாளம் காண்கிறார்கள். இத்தகைய விதிகளானவை மாற்றக்கூடிய மதிப்புகள் மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

– பல அடிப்படைக் கேள்விகளுக்கான பதில்கள் தனிப்பட்ட மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளைப் பொறுத்தது என்பதை அவர்கள் உணர்வார்கள். அவர்கள் தங்கள் பூர்வீக நாடுகளிலிருந்தும் ஸ்விட்சர்லாந்தில் இருந்தும் முக்கியமான மதிப்புகள் மற்றும் மரபுகளை அறிந்திருக்கிறார்கள், மேலும் இந்த தனிப்பட்ட மதிப்புகள் மற்றும் உலக கண்ணோட்டங்கள் எதைச் சார்ந்தது என்பதைப் பிரதிபலிக்கிறார்கள். அவர்கள் பூர்வீக நாடுகளிலிருந்தும் சுவிட்சர்லாந்திலிருந்தும் முக்கியமான தரங்களையும் மரபுகளையும் அறிந்திருக்கிறார்கள் மற்றும் அவற்றைப் பிரதிபலிக்கிறார்கள்.

– அவர்களால் சொந்த உணர்வுகளையும், மற்றவர்களின் உணர்வுகளையும் பெயரிடவும் மற்றும் புதிய சவால்களை விவாதிக்கவும் முடியும். மனிதர்களின் மன, உணர்வு மற்றும் உடல் செயல்முறைகளை பற்றிய அடிப்படை அறிவு மற்றும் *பூர்வீக மொழி*யில் அது தொடர்பான சொற்கள் ஆகியவை தங்களைப் பற்றியும் சகமனிதர்களைப் பற்றியும் ஆழமான புரிதலைப் பெறவும், தங்கள் சொந்த வாழ்க்கையில் தங்களைத் தாங்களே திசை திருப்பவும் உதவுகின்றன. தனிப்பட்ட உணர்வுகள் தேவைகள் மற்றும் கவலைகள் பற்றி பேசுவதற்கு தேவையான சொற்கள் அவர்களிடம் உள்ளன.

பாடத்திட்டம் 21க்கான இணைப்பு
NMG.11: «அடிப்படை அனுபவங்கள், மதிப்புகள் மற்றும் விதிமுறைகளை ஆராயவும் பிரதிபலிக்கவும்»

RKE.1:«அடிப்படை இருத்தலியல் அனுபவங்களைப் பிரதிபலித்தல்»

RKE.2:«மதிப்புகள் மற்றும் விதிமுறைகளைத் தெளிவுபடுத்தல் மற்றும் தீர்மானங்களுக்குப் பொறுப்பேற்றல்»

– குடும்பம், நட்பு, பள்ளி, பிறப்பிடமான நாடுகள், தங்கள் சொந்த இனக்குழு மற்றும் மத நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பல அனுபவங்களை உணர்வுபூர்வமாக கையாள்வதன் மூலம், பல்வேறு சமூக சூழல்கள் மற்றும் தொடர்புகள் பற்றிய நுண்ணறிவை அவர்கள் பெறுகிறார்கள். சமூகத்தின் ஒரு பகுதியாக, ஒரு தனிநபர் இதன் மூலம் பாதிக்கப்படலாம் மற்றும் சமூகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அவர்கள் அறிகிறார்கள்..

– அவர்கள் *பூர்வீக நாடு*களை நன்கு அறிந்தவர்கள்.
வெவ்வேறு சமுதாயங்களை சேர்ந்த மக்கள் பூர்வீக நாட்டில் மற்றும் சுவிட்சர்லாந்தில் முடிந்த வரை பாகுபாடு இன்றி சந்திக்கிறார்கள். அவ்வேளையில், அவர்கள் மற்றவர்களுடைய மதிப்புகள் மற்றும் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறார்கள்.. அவர்கள் மற்றவர்களின் மற்றும் தங்கள் சொந்த பாரபட்சங்களை அடையாளம் கண்டு அவற்றை ஆக்கப்பூர்வமாக சமாளிக்க அவர்களால் முடியும்.

பாடத்திட்டம் 21க்கான இணைப்பு
NMG.12: «மதங்கள் மற்றும் உலகக் கண்ணோட்டங்களைச் சந்தித்தல்»

RKE.3: «கலாச்சாரம் மற்றும் சமூகத்தில் மதங்களின் தடயங்கள் மற்றும் செல்வாக்கை அடையாளம் கண்டுக்கொள்தல்»

RKE.4.4: «மதங்கள் மற்றும் உலகக் கண்ணோட்டங்களைக் கையாளுதல்»

இயற்கை, மனிதன், சமூகம் - இடம், காலங்கள், சமூகங்கள்

– புவியியல், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளடக்கம் *பூர்வீக நாடு*களைப் பற்றிய அறிவை விரிவுபடுத்துகிறது. இதற்கு பொருத்தமான அடிப்படை நோக்குநிலை அறிவு இதை முழுமையாகக் கருத்தில் கொள்ள உதவுகிறது. அவர்களால் பல்வேறு ஆதாரங்களிலிருந்து தகவல்களை ஒழுங்கமைத்து மதிப்பிட முடியும். இது அவர்களின் *பூர்வீக நாடு*களில் தங்கள் வழியைக் கண்டறிய உதவுகிறது.

– மக்கள் தங்கள் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலம் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை மாணவ மாணவிகள் அங்கீகரிக்கின்றனர். அவர்கள் பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளைக் கையாளுகிறார்கள் மற்றும் அவர்களின் உடனடி வாழ்க்கைச் சூழலில் அவற்றின் தாக்கத்தை உணர்கிறார்கள:

பாடத்திட்டம் 21க்கான இணைப்பு
NMG.7: «மக்களின் வாழ்க்கை முறை மற்றும் வாழ்விடங்களை கண்டுபிடித்து க்கொள்தல் மற்றும் ஒப்பிடுதல்»

RZG.2: «வாழ்க்கை முறைகள் மற்றும்
வாழ்விடங்களை பாத்திரமாக்கல்»

RZG.3: «மனிதன் - சுற்றுச்சூழல் உறவுகளை
பகுப்பாய்தல்»

- அவர்களின் சொந்த ஆய்வு மற்றும் படங்கள், வரைபடங்கள் மற்றும் பிற ஊடகங்களின் உதவியுடன் (எ.கா. அவர்களின் *பூர்வீக மொழியில்* உள்ள வலைத்தளங்கள்), ஸ்விட்சர்லாந்துடனான ஒப்பீடு மற்றும் பிரதிபலிப்பின் காரணமாக, அவர்கள் தங்கள் *பூர்வீக நாடு* களைக் குறித்து ஓர் மாறுபட்ட பிம்பத்தைப் பெறுகிறார்கள்,

பாடத்திட்டம் 21க்கான இணைப்பு

NMG.8: «மக்கள் இடைவெளிகளைப் பயன்படுத்தி - தங்களைத் தாங்களே திசை திருப்பி - வடிவமைக்க உதவுதல்»

RZG.4: «இடைவெளிகளில் தன்னை நோக்குநிலைப்படுத்துதல்»

- மாணவ மாணவிகள், தங்கள் பூர்வீக நாட்டின் பண்டைய மற்றும் நிகழ்கால கலாச்சாரத்தின் சிறப்பை நன்கு அறிந்து, அவற்றை மதிக்கின்றனர்.

- அடிப்படை நோக்குநிலை அறிவின் அடிப்படையில், அவர்கள் *பூர்வீக நாடுகளின்* கடந்த கால மற்றும் நிகழ்கால நிகழ்வுகள், முன்னேற்றங்கள் மற்றும் சாட்சியங்களை வகைப்படுத்தலாம். இடம்பெயர்ந்த வரலாறு இதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளின் மூலம் ஒவ்வொரு விளக்கக்காட்சியும் அகநிலையானது மற்றும் மதிப்பீடுகளைக் கொண்டுள்ளது என்பதை அவர்கள் அறிகிறார்கள். வரலாற்று பின்னணி மூலம் வெவ்வேறு பார்வைகள் மற்றும் ஆர்வங்களை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதை அவர்கள் அறிகிறார்கள்.

பாடத்திட்டம் 21 இற்கான இணைப்பு
NMG.9: «நேரம், காலம் மற்றும் மாற்றம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதல் - வரலாறு மற்றும் கதைகளை வேறுபடுத்துதல்»

RZG.6: «உலக வரலாற்றின் தொடர்ச்சிகள் மற்றும் எழுச்சிகளை விளக்குதல்»

RZG.7: «வரலாற்றுக் கலாச்சாரத்தை பகுப்பாய்தல் மற்றும் பயன்படுத்துதல்»

– அவர்கள் சமூகத்தின் நிகழ்கால மற்றும் எதிர்கால முன்னேற்றங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும், தாக்கத்தை ஏற்படுத்தவும், பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும் உண்டான வழிகளை அறிந்திருக்கிறார்கள்.

– குழந்தைகளின் உரிமைகள் உட்பட அத்தியாவசியமான மனித உரிமைகளை நன்கு அறிந்திருக்கிறார்கள், அவற்றை நோக்கிச் செல்கிறார்கள்.

பாடத்திட்டம் 21 இற்கான இணைப்பு
NMG.10: «சமூகம் மற்றும் சமுதாயம் - சகவாழ்வு வடிவமைப்பு மற்றும் ஈடுபாடு»

RZG.8: «ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை புரிந்துகொண்டு ஈடுபடுதல்»

இயற்கை, மக்கள், சமூகம் - பொருளாதாரம், தொழில், வீடு

– மாணவ மாணவிகள் தங்கள் பூர்வீக நாடுகளின் வாழ்க்கை முறை மற்றும் தொழில் ஆகியவற்றைக் கையாளுகிறார்கள் மேலும் அவைற்றை சுவிசர்லாந்துடன் ஒப்பிடுகிறார்கள்.

– அரசியல், பொருளாதாரம் மற்றும் *கலாச்சாரம்* ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளைப் பற்றிய நுண்ணறிவு அவர்களிடம் உள்ளது.

பாடத்திட்டம் 21 இற்கான இணைப்பு
NMG.6: «தொழில், உற்பத்தி மற்றும் நுகர்வு - சூழ்நிலைகளை கண்டுபிடிக்கவும் »

WAH.1: «உற்பத்தி- மற்றும் வேலை சூழல்களை ஆராய்தல்»

WAH.3: «நுகர்வை ஒழுங்கமைத்தல்»

இயற்கை, மக்கள், சமூகம் - இயற்கை மற்றும் தொழில்நுட்பம்

– உலகளவில் செல்லுபடியாகும் சட்டங்கள் என்ற பொருளில் இயற்கை, தொழில்நுட்பம் மற்றும் மக்களின் தொடர்புகளை மாணவ மாணவிகள் மதிப்பிட முடியும்.

– அவர்கள் இயற்கை மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஷயங்களைச் சிறப்பாகக் கையாளுகிறார்கள் மற்றும் அதன் தொடர்பான சொற்களஞ்சியத்தை பூர்வீக மொழியில் விரிவுபடுத்துகிறார்கள்..

பாடத்திட்டம் 21க்கான இணைப்பு
NMG.2: «விலங்குகள், தாவரங்கள் மற்றும் வாழ்விடங்களை ஆராய்ந்து பாதுகாத்தல்»

NMG.5: «தொழில்நுட்ப வளர்ச்சிகள் மற்றும் செயலாக்கங்களை அடையாளம் காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் பயன்படுத்துதல்»

NT.1: «அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்தல்»

6 தனிப்பட்ட சுழற்சிகளில் பாடம்



படம் 2: வளர்ச்சி சார்ந்த அணுகுமுறைகள் மற்றும் துறைகள்
(பாடத்திட்டம் 21, அத்தியாயம் «1வது சுழற்சியின் முக்கியத்துவம் » அல்லது «2வது சுழற்சியிலன் முக்கியத்துவம்» என்பதை காண்க).

அத்தியாயம் 2.3 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பெறப்பட வேண்டிய திறன்கள் பாடத்திட்டக் கட்டமைப்பில் தனிப்பட்ட சுழற்சிகள் மற்றும் திறன் நிலைகளாகப் பிரிக்கப்படவில்லை, இவ்வாறாக HSK-பாடத்திட்டக் கட்டமைப்பு பாடத்திட்டம் 21 இலிருந்து வேறுபடுகிறது. குறிப்பிட்ட சுழற்சிக்கான திறன்களின் வரையறை மற்றும் தொடர்புடைய உள்ளடக்கம் HSK-நிதி உதவியளிக்கும் நிறுவனங்களின் பொறுப்பாகும். பின்வரும் உள்ளடக்கங்கள் தனிப்பட்ட சுழற்சிகளுக்கான அடிப்படைக் கருத்தாக்களாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.
மூன்று சுழற்சிகளையும் தாண்டி, ஒரு சுழற்சியில் இருப்பது போல, ஒன்றின் மேல் ஒன்றாகக் கட்டியெழுப்புவது போல் பெரும்பாலான திறன்கள் வளர்த்துக் கொள்ளப் படுகின்றன. குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் கற்றலின் சில முன் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதால், சில திறன்களின் வளர்ச்சி ஒன்றாவது சுழற்சியில் ஆரம்பத்தில் தொடங்கப்படாமல் பின்னர் ஒரு கட்டத்தில் தொடங்கப்படுகிறது. 3வது சுழற்சி முடிவதற்குள் மற்ற திறன் உருவாக்கம் முடிக்கப்படும்.

சுழற்சி 1

1வது சுழற்சியில், குழந்தைகளின் வளர்ச்சியில் வலுவாக கவனம் செலுத்துகிறது, முக்கியமாக ஆரம்பத்தில் பல்துறை வழியில் கட்டமைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நோக்குநிலையை கணக்கில் எடுத்துக்கொள்வதற்காக, பாடத்திட்டம் 21, 1வது சுழற்சியில் குழந்தையின் வளர்ச்சி மற்றும் கற்றலை எவ்வாறு இணைக்கலாம் என்பதற்கான ஒன்பது வளர்ச்சி சார்ந்த அணுகுமுறைகளைக் காட்டுகிறது.

மழலையர் பள்ளியில் உள்ள குழந்தைகள் புலனுணர்வு அனுபவங்கள் மற்றும் செயல்கள் மூலம் தன்னிச்சையாகவோ அல்லது ஒருவரைப் பின்பற்றுவதன் மூலமோ கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தற்செயலாக அல்லது உள்நோக்கின்றி என்ன கற்றுக் கொள்கிறார்களோ, அதை ஆசிரியரின் உதவியுடன் கருத்தாக்கம் செய்து வெளிப்படையான அறிவாக மாற்றுகிறார்கள். உதாரணமாக, அவர்கள் ஒரு படியிலிருந்து குதிக்கும்போது, படிக்கட்டு என்ற சொல்லை மட்டுமல்லாமல், குதிக்கும் நுட்பத்தையும், பயம் அல்லது வெற்றியின் உணர்வுகளையும் கற்றுக்கொள்கிறார்கள். அதன்படி, பாடங்கள் குழந்தைகளின் அன்றாட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அவர்களின் சொந்த செயல்கள் மற்றும் அனுபவங்களுக்கான சூழ்நிலைகளை உருவாக்குகின்றன.

குழந்தைகள் படங்களையும் யோசனைகளையும் வார்த்தைகளிலும் வாக்கியங்களிலும் பொருத்தி கற்றுக்கொள்ள உதவும் அனுபவங்களை பாடங்கள் வழங்குகின்றன. சொற்களஞ்சிய மேம்பாடு, குழந்தைகளின் *வாழ்க்கை சூழலுடன்* அப்பாற்பட்டு - இடஞ்சார்ந்த நோக்குநிலை (எங்கே, பின்னால், மேலே, முதலியன) மற்றும் தர்க்கரீதியான உறவுகளுக்கான (அதிக, குறைவான, அதே அளவு போன்றவை) செயல்பாட்டுச் சொற்களையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

பாடங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டான முறையில் படப் புத்தகங்கள் மற்றும் நூல்களின் உலகத்தை அறிமுகப்படுத்துகின்றன. குழந்தைகள் தங்கள் அன்றாட வாழ்க்கையிலிருந்து சின்னங்கள், அடையாளங்கள் மற்றும் உருவப்படங்களுக்கு ஒரு அர்த்தம் இருப்பதைக் கற்றுக்கொள்கிறார்கள்.

எழுதப்பட்டதையும் எழுத்தின் செயல்பாடுகளையும் குழந்தைகள் அடையாளம் காண்கின்றனர். அவர்கள் வெவ்வேறு எழுதும் பொருட்களை இலக்குநோக்கு மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் பயன்படுத்துகின்றனர். அவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பொறுத்து, அவர்கள் படிக்கவும் எழுதவும் தொடங்குகிறார்கள்.

முதல் மற்றும் இரண்டாம் வகுப்பில் உள்ள குழந்தைகளுக்கு, குடும்பத்தில், *பூர்வீக நாடு*களில் மற்றும் சுவிட்சர்லாந்தில் அன்றாட மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் ஆரம்பப் புள்ளியாகும். இந்த வயதிலும் குடும்பத்தின் மீதான பற்றுதல் மற்றும் அவர்களின் மதிப்புகள் மீதான நோக்குநிலை இன்னும் வலுவாக உள்ளது.

அனைத்து மொழிப் பகுதிகளும் வகுப்பில் ஊக்குவிக்கப்படுகின்றன: கேட்டல் மற்றும் பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல், மொழி(கள்) மீது கவனம், இலக்கியத்தின் மீது கவனம் செலுத்துதல். எனவே தான், முக்கியமாக விளையாட்டுடன் கூடிய கற்றல் வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன, ஆனால் முறையான மற்றும் இலக்குநோக்கு பயிற்சி பயன்படுத்தப்படுகிறது. வாசிப்பு மற்றும் எழுதுவதற்கான அறிமுகம் ஜெர்மன் மொழியில் கல்வியறிவை உள்ளடக்கியது. HSK-ஆசிரியருக்கும் வழக்கமான வகுப்பு ஆசிரியருக்கும் இடையே ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. இது அர்த்தமுள்ளதாக இருந்தால், HSK-ஆசிரியர் தவறான புரிதல்களைத் தடுக்க ஜெர்மன் எழுத்துக்களுடன் ஒப்பிட்டுக் காட்டுவார்.

சுழற்சி 2

இரண்டாவது சுழற்சியிலிருக்கும் குழந்தைகளுக்கு, சகவயதுடைய இந்த குழு மிகவும் முக்கியமானது. அவர்கள் தொடர்பு கொள்ளும் வெவ்வேறு வாழ்க்கை முறைகள் மற்றும் *வாழ்க்கை சூழல்*களில் இயற்கையான ஆர்வத்தை வளர்த்துக்கொள்கிறார்கள். அவர்கள் பொதுவாக தங்கள் சுற்றுச்சூழலுடன் (குடும்பம், பள்ளி) நேர்மறையான உறவைக் கொண்டுள்ளனர், மேலும் அதைக் ஒருபோதும் கேள்விக்கு உட்படுத்துவதில்லை. அவர்கள் வழக்கமாக பாரபட்சமற்றவர்கள், திறந்த மனதுடையவர்கள், தங்கள் மற்றும் பிற *கலாச்சாரங்களில்* புற உந்துதல் இன்றி தன்னைச்சையாகப் பழகக்கூடியவர்கள் மற்றும் *பூர்விகநாடு*களில் உள்ள தங்கள் குடும்ப உறவுகளில் மற்றும் பிணைப்புகளில் ஆர்வமாக உள்ளனர்.

பாடங்களில் அனைத்து மொழிப் பகுதிகளும் - கேட்டல் மற்றும் பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல், மொழி(கள்)மீது கவனம் செலுத்துதல் மற்றும் இலக்கியத்தின் மீது கவனம் செலுத்துதல் - ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன. கடினமான மற்றும் சிக்கலான மொழிப் பதிவேடுகளில் திறன்களை விரிவுபடுத்துவதில் குறிப்பாக கவனம் செலுத்தப்படுகிறது.

சுழற்சி 3

சுழற்சி 3 இல், இளைஞர்கள் தங்கள் சொந்த மதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழலின் மதிப்புகளை அதிகளவில் ஐயுறவு மனப்பான்மையுடன் கையாளுகிறார்கள் . இதன் விளைவாக, அவர்கள் பாரம்பரிய மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளிலிருந்து விலகிவிடலாம் அல்லது அவற்றை லட்சியப்படுத்தலாம். HSK-பாடங்களின் அர்த்தத்தைப் பற்றியும் அவர்கள் அடிக்கடி கேள்வி எழுப்புகின்றனர்.

HSK-ஆசிரியர் இந்த எழுச்சி நிலையைப் புரிந்துகொண்டு, அதற்கு பதிலளித்து, பாடத்தில் வெவ்வேறு (வாழ்க்கை) மாதிரிகளை விமர்சன ரீதியாக அறிமுகப்படுத்துகிறார். இந்த வழியில், இளைஞர்கள் தங்களைத் தாங்களே திசைதிருப்பவும், அவர்களின் ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளவும், தங்கள் சொந்த வழியைக்

கண்டறியவும் அவர் உதவுகிறார். குறிப்பாக, பல்வேறு அனுபவங்கள், மதிப்புகள் மற்றும் இணைப்புகளை அவர்களின் வாழ்க்கையில் ஒருங்கிணைப்பதில் அவர் இளைஞர்களுக்கு உதவுகிறார்.

இப் பாடங்கள் இளைஞர்களின் தனிப்பட்ட திறன்களையும் அறிவையும் கணக்கில் எடுத்துக்கொள்கின்றன. HSK-வகுப்புகளில் மட்டுமின்றி, கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளி மற்றும் பள்ளிக்கு வெளியே உள்ள வகுப்புகளிலும் - மாணவர்கள் தங்கள் குறிப்பிட்ட *பல கலாச்சாரத்தன்மையையும்* மற்றும் *கலாச்சார* அறிவையும் வெளிப்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

வாய்வழி மற்றும் எழுத்துவழி தொடர்பு, மொழிக் கருத்தாய்வு மற்றும் ஊடகக் கல்வி ஆகியவை பாடத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. இளைஞர்கள் வெவ்வேறு மொழிகளில் *(பூர்வீக மொழி*, ஜெர்மன், பிரஞ்சு, ஆங்கிலம்) பெற்ற திறன்களைப் பயன்படுத்தி, ஒப்புமைகளை பிரித்தெடுக்கவும், தங்கள் அறிவை குறுக்கு இணைப்பு செய்யவும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். இந்த வழியில், அவர்கள் தங்களுடைய மொழி மற்றும் செயல் திறன்களை விரிவுபடுத்தலாம்.

வகுப்புகள் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வளர்த்துக்கொள்ளவும், தங்களை தொழில்முறை உலகிலும், சுவிஸ் சமூகத்தில் ஒருங்கிணைக்கவும் உதவுகின்றன. குறிப்பாக, அவர்களது *இருமொழி* அல்லது *பன்மொழி* மற்றும் *பலகலாச்சாரத் திறன்களை* மேற்பட்ட மூலவளங்களாக ஏற்றுக்கொண்டு அவற்றை பயன்படுத்த இவ் வகுப்புகள் ஊக்குவிக்கின்றன.

7 சொற்களஞ்சியம்

இந்த உரையில் தொடர்புடைய சொற்கள் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகின்றன என்பதை கீழே உள்ள விளக்கங்கள் விவரிக்கின்றன. வேறு எவ்வகையிலும் குறிப்பிடாத பட்சத்தில், பின்வரும் விளக்கங்கள் சூரிச் மாநிலத்தின் கல்வித் துறையின் தாய்மொழி மற்றும் கலாச்சாரத்திற்கான **அடிப்படை பாடத்திட்டத்தின்** அடிப்படையிலும், **EDK** இன் தலைமைச் செயலகத்தால் வெளியிடப்பட்ட தாய்மொழியில் பாடங்கள் வெளியீட்டின் அடிப்படையிலும் இருக்கும்.

இருமொழி
→ *இரண்டாம் மொழி* பார்க்கவும்.

வட்டாரமொழி வட்டாரமொழி அல்லது வாய்வழி என்பது ஒரு இயல்பு மொழி(எ.கா. ஜெர்மன்)யின் உள்ளூர் அல்லது பிராந்திய மாறுபாடு அல்லது ஒரு பிராந்திய மொழி யாகும் (எ.கா. சுவிஸ் ஜெர்மன்).

இது *பூர்வீக மொழியின்* அந்தந்த *இயல்புநிலை மாறுபாட்டிலிருந்து* அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வேறுபடலாம் மற்றும் சில சமயங்களில் ஒரு பிராந்தியத்தின் உள்ளூர் மொழியாகச் செயல்படலாம்.

முதல்மொழி (L1), பூர்வீகமொழி
முதலாவதான சமூகமயமாக்கும் மொழி முதல் மொழி என்று கருதப்படுகிறது, அதாவது ஒரு நபர் காலவரிசைப்படி முதலில் கற்றுக்கொண்ட மொழி. அன்றாட வாழ்க்கையில், இது «*தாய்மொழி*» என்றும் அழைக்கப்படுகிறது. பல குழந்தைகள் முதலில் ஒன்று மட்டுமல்ல, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றுக்கொள்கிறார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அதாவது ஒரு நபர் பல முதல் மொழிகளைக் கொண்டிருக்கும் போது, அவர் ஒரே நேரத்தில் இருமொழி பேசுகிறார் என கூறப்படுகிறது. வாழ்நாள் முழுவதும் முதல் மொழி ஆதிக்கம் செலுத்தும் மொழியாக இருக்கக் கூடும், ஆனால் சில சமயம், குறிப்பாக அது பயிற்றுவிக்கும் மொழி மற்றும் ஒரு நபர் வசிக்கும் இடத்தின் *பிராந்திய மொழிக்குப்* பொருந்தவில்லை என்றால், அது அதன் முக்கியத்துவத்தை இழக்கலாம் .

ஒருவரின் பூர்வீக மொழி என்பது அவரின் *பூர்வீக நாடுகளில்* அல்லது பூர்வீகப் பகுதிகளில் உள்ளூர் மொழியாக அல்லது *இயல்பு மொழியாகக்* கருதப்படும் மொழி அல்லது வட்டாரமொழி ஆகும். ஒருவர் இரண்டாவது அல்லது மூன்றாம் தலைமுறை புலம்பெயர்ந்தோராக இருந்தால், அவரின் பூர்வீக மொழி எப்போதும் அவரின் முதல் மொழியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

துறைசார் மொழி
ஒரு துறைசார் மொழி என்பது *பூர்வீக மொழியி*ன் இயல்புநிலை மாற்றுருவின் மாறுபாடாகும், இது ஒரு துறை சார்ந்த சொற்களஞ்சியத்தால் வகைப்படுத்தப்படுகிறது.

அயல்மொழி
ஒரு அயல்மொழி என்பது ஒருவரின் முதல் மொழியுடன் கூடுதலாகவும் மற்றும் *பிராந்திய மொழி*யாகக் கருதப்படும் இடத்திற்கு வெளியேயும் கற்றுக் கொள்ளப்படும். இதனால், அயல் மொழியானது, இலக்கு மொழி பேசப்படும் நாட்டில் பெறப்படும் இரண்டாவது மொழியிலிருந்து வேறுபடுகிறது. சில அயல் மொழிகளைக் கற்பிப்பது அரசுப் பள்ளிகளின் பணியாகும். சுவிஸ் மாகாணங்களின் அரசுப் பள்ளிகளில், நாட்டின் பிற பகுதிகளின் ஆட்சி மொழிகளும் மற்றும் அயல் மொழியாக ஆங்கிலமும் பொதுவாகக் கற்பிக்கப்படுகிறது.

செயல்பாட்டுப் பன்மொழி
செயல்பாட்டு பன்மொழி என்பது சூழ்நிலை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பல மொழிகளில் தொடர்பு கொள்ளும் ஒரு நபரின் திறனாகும். இந்த வகை மொழித் திறன் சீரான , சமச்சீர் *பன்மொழிப் புலமைக்கு* மாறானது. செயல்பாட்டு *பன்மொழியை* மதிப்பீடு செய்வதன் மூலம், இம் மொழித் திறனிற்கு பல்வேறு, வித்தியாசமாக நன்கு வளர்ந்த அடிப்படைத் திறன்கள் இருக்கிறது என்று அங்கீகரிக்கப் படுகிறது. எனவே, ஒவ்வொரு அடிப்படைத் திறனிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்பது எப்போதும் அவசியமில்லை, சில சமயங்களில் ஒருவரின் சொந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, சில திறன்களில் தேர்ச்சி பெற்று, அவற்றை செயல்பாட்டு ரீதியாகப் பயன்படுத்த முடிந்தாலே போதும். ஒரு செயல்பாட்டுப் *பன்மொழி*யில் பயிற்சி பெறுவது பொதுப் பள்ளியின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

பூர்வீக நாடுகள், பூர்வீக மாநிலங்கள்
ஒரு நபர் அல்லது சட்டப்பூர்வ காப்பாளர் (அல்லது பிற உறவினர்கள்) முன்பு வாழ்ந்த அல்லது இன்னும் வசிக்கும் நாடுகள் பூர்வீக நாடாகும். மக்கள் தங்கள் சொந்த நாடுகளுடன் வெவ்வேறு அளவிலான தொடர்பைக் கொண்டிருக்கலாம், எடுத்துக்காட்டாக, இது இடம்பெயர்வு தலைமுறையைப் பொறுத்ததாக இருக்கலாம்.

இயல்பு மொழி
➞ *பூர்வீக மொழியின் இயல்புநிலை* மாற்றுருவைக் காண்க.

அடையாளம், இரு/பல கலாச்சார அடையாளம்
(தனிப்பட்ட) அடையாளம் என்பது ஒரு நபரின் தனித்துவம் மற்றும் தன்னைத் தானறிதல் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. அடையாளங்கள் செயல்முறையாக்கத்தை சார்ந்தவை மற்றும் செயல்திறன் மிக்கவை. அவை சமூக தொடர்புகளில், குறிப்பாக மொழி மூலம் உருவாக்கப்படுகின்றன. இரு/பல கலாச்சார அடையாளம் என்பது ஒரே நேரத்தில் இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) வெவ்வேறு கூட்டமைப்புகளை சேர்த்திருப்பது மற்றும் அவற்றின் சில அடையாளங்களோடும் நிலைநிற்கையோடும் தன்னை இனங்காணும் அகநிலை உணர்வாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

ஒருங்கிணைப்பு
ஒருங்கிணைப்பு என்றால், வெவ்வேறு சமூக, *கலாச்சார* மற்றும் மொழியியல் பின்னணிகளைக் கொண்ட மக்கள் மற்றும் குழுக்கள் ஒரு சமூகத்தில் சமமான சமூக மற்றும் அரசியல் பங்கேற்பை அடைவதோடு தங்கள் குறிப்பிட்ட மொழி சம்பந்தமான மற்றும் *கலாச்சார* பின்னணியுடன் அவர்கள் மதிக்கப்படும் செயல்முறையாகும்.

திறன்கள்
பாடத்திட்டம் 21 இன் «அடிப்படைகள்» அத்தியாயத்தில் «திறன்கள்» என்பதன் சொற்பொருள் விளக்கம் ஃப்ரான்ஸ் E. வைனெர்ட்- டின் சொற்பொருள் விளக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளது. அவருடைய கருத்தின்படி, திறன்களில் «பல உட்பொருள் சம்பந்தமான மற்றும் உருவாக்கம் தொடர்பான அம்சங்கள் அடங்கும். அவை: திறன்கள், திறமைகள் மற்றும் அறிவு, மட்டுமல்லாமல் விருப்பம், அணுகுமுறைகள் மற்றும் மனோபாவங்களுமாகும். [...]திறன்களின் அம்சங்கள் தொழில்நுட்பம் மற்றும் பலதுறைத் தன்மை கொண்டவை. தொழில்நுட்ப அறிவையும் அதனுடன் தொடர்புடைய திறன்கள் மற்றும் தனித்திறனாற்றல்களையும் தொழில்நுட்பத் திறன்கள் ஆனவை விவரிக்கின்றன. பல்துறைத் திறன்கள் என்பது பாடப் பகுதிகளுக்கு அப்பாற்பட்டு பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் கற்றுக்கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும் அறிவையும் திறன்களையும் குறிக்கிறது. இதில் தனிப்பட்ட, சமூக மற்றும் முறையான திறன்களை உள்ளடங்கும்.»

கலாச்சாரம்

ஒரு சமூகம் அல்லது இனக்குழுவிற்கு தனித்தன்மையளிக்கும் சிறப்பியல்பு வாய்ந்த ஆன்மீக, பொருள் சார்ந்த மற்றும் உணர்ச்சி அடிப்படையிலான அம்சங்களாக இந்த அடிப்படை பாடத்திட்ட ஒழுங்கமைப்பில் *கலாச்சாரம்* பார்க்கப்படுகிறது.. இதில் கலை மற்றும் இலக்கியம் மட்டுமல்ல, வாழ்க்கை முறைகள், அடிப்படை மனித உரிமைகள், மதிப்பு அமைப்புகள், மரபுகள் மற்றும் பலதரப்பட்ட மதங்கள் ஆகியவை அடங்கும். தனிநபர்களை அவர்களின் கலாச்சாரம் அல்லது அவர்களின் இனக்குழு என்று குறைவாக மதிப்பிட முடியாது. எனவே அவர்கள் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக சில பண்புகள், குணங்கள் அல்லது நடத்தைகளைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும், ஒரு சமூகம் அல்லது ஒரு இனக்குழுவின் கலாச்சாரம் ஒரே மாதிரியானதாகவோ அல்லது நிலையானதாகவோ அல்லது பிரித்தெடுக்கப்பட்டதாகவோ இல்லை. மாறாக, கலாச்சார நடைமுறை தொடர்ந்து புதிய அர்த்தங்களை உருவாக்குகிறது மற்றும் பல்வேறு கலாச்சார நடைமுறைகளின் கலவையாக உள்ளது.

வாழ்க்கைச்சூழல்

அடிப்படை பாடத்திட்டமானது, மக்கள் தங்கள் நிகழ்காலத்தில் கையாளும் அனைத்து விஷயங்கள், நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை மொத்தமாக வாழ்க்கைச்சூழலாக புரிந்துகொள்கிறது. வாழ்க்கைச் சூழல் என்பது தனிப்பட்ட வாழ்க்கை சூழ்நிலையைப் பொறுத்து, முழு உலகின் ஒரு பகுதி மட்டுமேயாகும்.. அடிப்படை பாடத்திட்டமானது கலாச்சாரம் மற்றும் வாழ்க்கைச் சூழலுக்கு இடையே தெளிவான வேறுபாட்டை ஏற்படுத்தவில்லை, ஆனால் இரண்டாவது வார்த்தையின் மூலம் அது தனிநபரின் நிகழ்காலம், அவரது சொந்த செயல்களுக்கும் பேச்சுக்கும் உள்ள உறவை அழுத்திக் காண்பிக்கிறது..

பிராந்திய மொழி

பிராந்திய மொழி என்பது ஒரு இடத்தின் பெரும்பான்மையான மக்கள் ஒருவருடனொருவர் தொடர்பு கொள்ளும் மொழியாகும். சுவிட்சர்லாந்தைப் பொறுத்தவரை, பிராந்திய மொழிகள் சுவிஸ் ஜெர்மனனுடைய வட்டாரமொழி அல்லது பிரெஞ்சு, இத்தாலியன் அல்லது ரேடோரோமன் ஆகும்.

பன்மொழித் தன்மை , பன்மொழி

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேசக்கூடிய குறிப்பிடத்தக்க நிகழ்வை பன்மொழி என்ற சொல் குறிக்கிறது. இச் சொல் தனிநபர்கள் மற்றும் முழு சமூகங்களையும் குறிக்கலாம். சில நேரங்களில் இச் சொல், சுவிட்சர்லாந்தில், நான்கு தேசிய மொழிகள் பேசப்படும் தனிச்சிறப்புக்குரிய நிகழ்வை விவரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. தற்போதைய அடிப்படை பாடத்திட்டத்தில், இந்த மொழிகளுடனான (*முதல் மொழி, இரண்டாவது மொழி, பூர்வீக மொழி, அயல் மொழி*)ஆகியவற்றுடன் தனக்கு இருக்கும் தனிப்பட்ட உறவைப் பொருட்படுத்தாமல், ஒரு தனிநபருக்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் பேச திறனிருந்தால், அவர் பன்மொழி பேசும் நபர் என்று அழைக்கப்படுகிறார். இந்த அர்த்தத்தில், எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை அதன் *முதல் மொழியாக* ஜெர்மனையும் மற்றும் இரண்டு *வெளிநாட்டு மொழிகளையும்* பேசினால் அது *பன்மொழி* பேசுபவதாகக் கருதப்படுகிறது.

→ *இருமொழிதன்மை அல்லது பன்மொழிதன்மை*யைக் காண்க.

தாய்மொழி

தாய்மொழி என்றால் முதலில் பெற்ற மொழி, அதாவது *முதல் மொழி* என்று பொருளாகும். முதல் மொழியைப் பெறுவதற்கு தாய் மட்டுமே முக்கியம் என இந்த சொல் பொருள் தருவதால், இந்த வார்த்தை துல்லியமற்றது. எனவே அடிப்படை பாடத்திட்டம் *முதல் மொழி*யைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

மொழி விழிப்புணர்வு (Language Awareness)

மொழி விழிப்புணர்வு (அல்லது Language Awareness) என்பது வெளிப்படையான மொழி அறிவு, மொழி குறித்த மனப்பூர்வமான விழிப்புணர்வு, மொழி பயன்பாடு மற்றும் மொழி கற்றல் செயல்முறைகளுக்கான உணர்திறன் ஆகியவற்றைக் குறிக்கிறது. இதில் குறிநிலை மொழியியல் கருத்துப்பரிமாற்றம் அடங்கும் எ.கா. மொழிப் பிரிப்பு அல்லது மொழி கலப்பு மற்றும் அத்துடன் மொழி ஒப்பீடுகள் எ.கா. *முதல்* மற்றும் *இரண்டாவது மொழிக்கு* இடையில் அல்லது இயல்பு மொழிக்கும் வட்டாரமொழிக்கும் இடையில். மொழி விழிப்புணர்வின் கல்வி இலக்குகளில், மொழி(கள்) மீதான ஆர்வம் மற்றும் ஈடுபாடு, மொழியியல் பன்முகத்தன்மை (வகுப்பறையில், சமூகத்தில்) மீதான கவனம் மற்றும் அங்கீகாரம், மொழி மற்றும் கருத்துப்பரிமாற்றம் பற்றிய பல கண்ணோட்டப் பார்வை ஆகியவை அடங்கும்.

பூர்வீக மொழியின் இயல்புநிலை மாற்றுரு

தரப்படுத்தப்பட்ட மற்றும் அகராதியிலும் இலக்கணங்களிலும் பதிவுசெய்யப்பட்டு, சட்டப்படி நிறுவப்பட்ட ஒரு மொழியின் பதிப்புருவே ஒரு பூர்வீக மொழியின் இயல்புநிலை மாற்றுருவாகும்.. இது சில நேரங்களில் எழுத்து மொழி , இலக்கிய மொழி அல்லது உயர்நிலை மொழி என்றும் அழைக்கப்படுகிறது மற்றும் பொதுவாக *வட்டாரமொழி*களிலிருந்து வேறுபடுகிறது. இயல்புநிலை மாற்றுரு எப்போதும் குறிப்பிட்ட (எ.கா. உத்தியோகபூர்வ) சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட்டால், ஆனால் அன்றாட வாழ்வில் ஒரு வட்டாரமொழி பேசப்பட்டால், இது மரபுசார் இருமொழியம் என குறிப்பிடப்படுகிறது. இயல்புநிலை மாற்றுருவில் தேர்ச்சி பெறுவதே அரசுப் பள்ளிகள் மற்றும் HSK-வகுப்புகளில் மொழி கற்பித்தல் முயற்சிகளின் முக்கிய இலக்காக கருதப்படுகிறது.

பல கலாச்சாரத் திறன்,
பல கலாச்சாரக் கற்றல்

பல கலாச்சாரத் திறன் என்பது வெவ்வேறு கலாச்சார பின்னணியில் உள்ளவர்களுடன் வெற்றிகரமாக வேலை செய்யும் திறனைக் குறிக்கிறது. இது கலாச்சாரக் கற்றல் மூலம் உருவாக்கப்படலாம் மற்றும் வெவ்வேறு *வாழ்க்கைச் சூழல்களில்* அனுபவங்கள் மூலம் மேம்படுத்தப்படலாம்.

இரண்டாவது மொழி (L2)

இரண்டாவது மொழி என்பது காலவரிசையைப் பொறுத்தவரை இரண்டாவதாகக் கற்றுக் கொள்ளப்படும் மொழியாகும்.

இடம்பெயர்வுப் பின்னணியில் உள்ளவர்களுக்கு, இது பெரும்பாலும் சமூக வாழ்விலும் உள்ளூர் மொழி சமூகத்தின் எழுத்துப் பண்பாட்டிலும் பங்கேற்க உதவும் மொழியாகும், எ.கா. ஜெர்மன் மொழி பேசப்படும் சுவிட்சர்லாந்தின் ஒரு பகுதியில் ஜெர்மன் மொழி .. அன்றாட வாழ்க்கையைச் சமாளிக்க பெரும்பாலும் அல்லது அடிக்கடி அவசியம் என்ற வகையில், இரண்டாவது மொழி *அயல் மொழி*களிலிருந்து வேறுபடுகிறது. ஒருவர் ஏற்கனவே இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறை புலம்பெயர்ந்தவர்களாக இருந்தால், உள்ளூர் மொழி *முதல் மொழி*யாகவும், *பூர்வீக மொழி* இரண்டாம் மொழியாகவும் இருக்கலாம் அல்லது பள்ளிக் கல்வியின் போது L2 ஆதிக்கம் செலுத்தும் மொழியாக இருக்கலாம்.

இரண்டாவது மொழி பெறுதல்

மொழி கற்பிக்கின்ற கலைகளில், *இரண்டாவது* மற்றும் *அயல் மொழி பெறுதலுக்கு* இடையே ஒரு வேறுபாடு உள்ளது. இம் மொழி *உள்ளூர் மொழியாகப்* பேசப்படும் வட்டாரத்தில், தனக்கு இரண்டாவது மொழியாக இருக்கும் இம்மொழியோடு ஒன்றிப் போனால், இது இரண்டாவது மொழி கையகப்படுத்தல் ஆகும்.. இதன் சம்பந்தமான மொழி கற்பித்தல், ஒரு தனி மொழி கற்பிக்கும் கலையாக கையாளப்படுகிறது, இது *முதல் மொழி* மற்றும் *அயல் மொழியைக்* கற்றுக்கொள்வதற்கான கற்பிக்கும் கலையிலிருந்து வேறுபடுகிறது.

இரு- அல்லது பன்மொழித்தன்மை, இரு- அல்லது பன்மொழி

விரிவான அர்த்தத்தில், ஒருவர் நேரடியாக அல்லது மறைமுகமாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் திறன்கள் கொண்டிருந்தால் அவர் இருமொழி அல்லது பன்மொழித் தன்மை கொண்டவர் என்று கருதப்படும்.

இருப்பினும், தற்போதைய அடிப்படை பாடத்திட்டத்தில் ஒரு குறுகிய வரையறை பயன்படுத்தப்படுகிறது: ஜெர்மன் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஜெர்மன் அல்லாத *பூர்வீக மொழி*களைப் பேசுகிற நபர்கள் மட்டுமே இருமொழி அல்லது பன்மொழி பேசுகிறவர்கள் என்று விவரிக்கப்படுவார்கள்.

8 இணைப்புகள்

இணைப்பு I: சூரிச் மாகாணத்தில் அடிப்படை நிபந்தனைகள்

இந்த பின்னிணைப்பு முதலில் **HSK**-கற்பித்தலின், **மாகாணங்களுக்கு** இடையிலான மற்றும் சட்ட அடிப்படையின் மேலோட்டத்தை வழங்குகிறது. பின்னர் சூரிச் பொதுக் கல்வி அலுவலகம், சட்ட நிலைமைகளின் விளைவாக மாநிலத்தில் உருவாக்கப்பட்ட நடைமுறையை (செயல்முறைகள், அமைப்பு, ஒத்துழைப்பு) விவரிக்கிறது.

மாகாணங்களுக்கு இடையிலான அடிப்படைகள்

ஸ்விட்சர்லாந்து நாட்டு மாகாணக் கல்வி அமைச்சர்களின் மாநாடு (EDK) HSK-பாடங்கள் குறித்து பலமுறை கருத்துரைத்துள்ளது. அக்டோபர் 24, 1991 இல் அதன் «அந்நிய மொழி பேசும் குழந்தைகளின் கல்விக்கான பரிந்துரைகள்» ளில், «தங்கள் பிறந்த நாட்டின் மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பேணுவதற்கான» *இடம்பெயர்வு பின்னணியைக்* கொண்ட குழந்தைகளின் அடிப்படை உரிமையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. குறிப்பாக, சம்பந்தப்பட்ட மாகாண அல்லது உள்ளூர் அதிகாரங்களுக்கு EDK இவ்வாறு பரிந்துரைக்கிறது:

– HSK-பாடங்களை பொருத்தமான வடிவத்தில் ஆதரிக்கவும், முடிந்தால், குறைந்தபட்சம் இரண்டு வாராந்திர பாடங்களின் அளவிற்கு அவற்றை பாட நேரத்தில் ஒருங்கிணைக்க வு வேண்டும்,

– தேவையான பள்ளி வசதிகளை இலவசமாக வழங்க வேண்டும்,

– வழக்கமான பள்ளிகள் மற்றும் HSK- வகுப்புகளின் ஆசிரியர்களிடையே ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும்,

– HSK-களுக்கு வருகையைத் தெரியப்படுத்தவும், பொருந்தினால், மாணவர்களின் மதிப்பெண்களை பள்ளி சான்றிதழில் சேர்க்க வேண்டும்,

– கல்வி வாய்ப்புகள் பற்றி இடம்பெயர்வு பின்னணி கொண்ட பெற்றோருக்குத் தெரிவிக்க வேண்டும்,

– மாணவர்களை மதிப்பிடும் போதும் மற்றும் முனைவர் பட்ட முடிவுகளை மற்றும் தேர்வு முடிவுகளை எடுக்கும்போதும் HSK-வகுப்புகளில் பெற்ற பூர்வீக மொழித் திறன்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

2004 ஆம் ஆண்டின் தேசிய, மொழி கற்பித்தல் உத்தியில், EDK ஆனது HSK பாடங்களில் இடம்பெயர்தல் பின்னணியைக் கொண்ட குழந்தைகளின் பிறப்பிடமான மொழிகளை ஊக்குவிக்கவும் தீர்மானம் எடுக்கிறது (கட்டாயப் பள்ளியில் மொழி கற்பித்தல்: EDK இன் உத்தி மற்றும் மார்ச் 25, 2004 அன்று நாடு தழுவிய ஒருங்கிணைப்புக்கான வேலைத் திட்டம் ஆகியவற்றை காண்க). மதரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நடுநிலையாக வடிவமைக்கப்பட்ட HSK-படிப்புகளுக்கு முறைப்படியான ஆதரவை வழங்க ஒற்றுமைப் பத்திரம் கையொப்பமிட்டுள்ள கண்டோன்கள்மேற்கொள்வதால், கட்டாய பள்ளிக்கல்வியின் ஒத்திசைவுக்கான மண்டலங்களுக்கிடையிலுள்ள ஒப்பந்தமும் அதே இலக்கை பின்பற்றுகிறது. (ஜூன் 14, 2007 இன் கட்டாய பள்ளிக்கல்வியின் (HarmoS) ஒத்திசைவுக்கான இடைநிலை ஒப்பந்தத்தை காண்க). மொழிகள் குறித்த சட்டத்தின் ஒரு பகுதியாக HSK-கல்வி திட்டங்களை சுவிட்சர்லாந்து நாட்டு அரசு ஆதரித்து வருகிறது (அக்டோபர் 5, 2007இல் நிறுவப்பட்ட தேசிய மொழிகள் மீதான மற்றும் மொழியை பேசும் தொகுதியினர்களுக்கு இடையேயான புரிதல் குறித்த ஐக்கிய மாகாணங்களின் கூட்டரசு சட்டம் (மொழிகள் குறித்தச் சட்டம், எஸ்பிஜி)- மற்றும் தேசிய மொழிகள் மீதான மற்றும் மொழியை பேசும் தொகுதியினர்களுக்கு இடையேயான புரிதல் குறித்த ஆணை (மொழிகள் குறித்த ஆணை, எஸ்பிவி)-ஜூன் 4, 2010 ஆகியவற்றை காண்க).

சூரிச் மாநிலத்தில் சட்ட அடிப்படை

சூரிச் மாநிலத்தில், HSK-பாடங்கள் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளிச் சட்டம் மற்றும் கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளி ஆகியவற்றால் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன:

பிப்ரவரி 7, 2005 இன் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளிச் சட்டம்

§ 15.

[1] நிர்வாகம், பள்ளி சாராத நிதியுதவி நிறுவனங்களால் வழங்கப்படும் தாய்மொழி மற்றும் கலாச்சாரப் பாடங்களை அங்கீகரிக்க முடியும்.

[2] இந்த சட்டம், அங்கீகாரத்திற்கான நிபந்தனைகளையும் அவற்றின் விளைவுகளையும் ஒழுங்குபடுத்துகிறது.

§ 13.

1 தாய்மொழி மற்றும் கலாச்சாரப் படிப்புகளில், அயல்மொழி மாணவர்கள் தங்கள் முதல் மொழி மற்றும் அவர்கள் பூர்வீக நாட்டின் கலாச்சாரத்தை பற்றிய அறிவை விரிவுபடுத்துகிறார்கள்.

2 படிப்புகள் பூர்வீக நாடுகளின் தூதரகங்கள் அல்லது துணைத்தூதரகங்களால் நடத்தப்படுகின்றன. கல்வி இயக்குனரகமானது மற்ற நிதியுதவி நிறுவனங்களால் நடத்தப்படும் படிப்புகளையும் அங்கீகரிக்க முடியும்.

3 கல்விக் வாரியத்தால் வழங்கப்பட்ட அடிப்படை பாடத்திட்டதுடன் ஒத்திருந்தும், அரசியல் ரீதியாக, மதரீதியாக நடுநிலையானதாகவும், லாபம் சார்ந்ததாக இல்லாமலும் இருந்தால், இப் படிப்புகள் அங்கீகரிக்கப்படும்.

4 ஆசிரியர்கள், கற்பிக்க தகுதி மற்றும் போதிய ஜெர்மன் அறிவு பெற்றிருக்க வேண்டும், மேலும் கட்டாய மேற்படிப்பு பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும்.

§ 14

1 முடிந்தால், வகுப்புகள் பாட நேரத்திற்கு வெளியே திட்டமிடப்படும்.

2 நகராட்சிகள்

a. முடிந்தால், பொருத்தமான வளாகத்தை இலவசமாக வழங்கின்றன,

b. பவகுப்பு நேரத்தில் வகுப்புகள் நடந்தால், மாணவ மாணவிகளுக்கு வாரத்திற்கு அதிகபட்சம் இரண்டு பாடங்களை முறையான வகுப்புகளில் வழங்குகின்றன,

c. படிப்புகளை செயல்படுத்துவதில் உள்ள முறைகேடுகளைக் கல்வி இயக்குனரகத்திற்கு தெரிவிக்கின்றன.

3 வகுப்பு மதிப்பெண்கள் பள்ளிச் சான்றிதழில் சேர்க்கப்படும்.

4 கல்வி இயக்குநரகமானது பதிவு செயல்முறையை ஒழுங்குபடுத்துகிறது. மற்றப்படி, படிப்புகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவை நிதியுதவியளிக்கும் நிறுவனங்களின் பொறுப்பாகும், குறிப்பாக நிதி மற்றும் ஆசிரியர் களை தேர்வு செய்தல், வேலையில் அமர்த்துதல், மற்றும் மேற்பார்வையிடுதல்.

சூரிச் மாகாணத்தில் வகுப்புகளை ஒழுங்கமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்

சூரிச் மாகாணத்தில் உள்ள HSK-நடைமுறை, சட்ட நிபந்தனைகள் காரணமாக மாகாணத்தில் வளர்ச்சியடைந்த விதம், ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளது. இத் துணை அத்தியாயத்தில் உள்ள தலைப்புகள் அகர வரிசைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதி உதவியளிக்கும் நிறுவனங்களின் அங்கீகாரம்

சட்டத் தேவைகள் மற்றும் உள் வழிகாட்டுதல்கள் பூர்த்தி செய்யப்பட்டால், கல்வித் துறையானது நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து HSK-படிப்புகளை அங்கீகரிக்கக் கூடும். கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அலுவலகம் அங்கீகார நடைமுறையை ஒழுங்குபடுத்தி நடத்துகிறது. அங்கீகரிக்கப்பட்ட HSK-படிப்புகள் ஏற்கனவே தொடர்புடைய மொழியில் இருந்தால், தற்போதுள்ள நிதி உதவியளிக்கும் நிறுவனத்தைத் தொடர்புகொண்டு ஒத்துழைப்பைப் பெற வேண்டும். ஒவ்வொரு மொழிக்கும் ஒரே மாதிரியான, பரந்த அளவில் ஆதரிக்கப்படும் HSK-சலுகையே இதன் நோக்கம்.

நிதியுதவி நிறுவங்களின் HSK-படிப்புகள் அங்கீகரிக்கப்படுவதற்கு, இவை குறிப்பாக

– படிப்புகள் HSK-அடிப்படை பாடத்துடன் ஒத்துப்போகின்றதா என்றும் அரசியல் ரீதியாகவும் மத ரீதியாகவும் நடுநிலையாக இருக்கின்றதா என்றும் உறுதிப்படுத்த வேண்டும்,

– தகுதியான, பொருத்தமான ஜெர்மன் மொழி அறிவு உள்ள HSK-ஆசிரியர்களைக் கொண்டிருக்க வேண்டும்,

– லாப நோக்கமின்றி இருக்க வேண்டும்,

– உள்ளூர் பள்ளிகள் மற்றும் கல்வி இயக்குனரகத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

அத்தாட்சி மற்றும் சான்றிதழ் பதிவு
அத்தியாயம் 3, பக்கம் 9 பார்க்கவும்

மேற்பார்வை

கல்வியியல் மற்றும் தனிப்பட்ட ரீதியில், HSK-பாடங்கள், நிதியுதவி செய்யும் நிறுவனங்களின் மேற்பார்வைக்கு உட்பட்டது. கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி ஆணையத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட புள்ளிகளைப் பொறுத்தவரை, அது பள்ளி அதிகாரிகளின் மேற்பார்வைக்கு உட்பட்டது.

பங்கேற்பைக் கண்காணிப்பதும், தாமதமாக வகுப்பில் பங்கேற்பவர்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் நிதியுதவி தரும் நிறுவனங்களின் பொறுப்பாகும். கோரிக்கையின் பேரில், அவர்கள் பள்ளி நிர்வாகிகளுக்கு பங்கேற்பு மற்றும் பாடங்களின் கட்டுப்பாடு பற்றிய நுண்ணறிவை வழங்குகிறார்கள். HSK-வருகையின் நோக்கத்திற்காக குழந்தைகளுக்கு பாடங்களிலிருந்து கலையச்செய்ய கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆய்வு செய்யும் உரிமை உண்டு.

ஏதேனும் குறைகள் இருப்பின், சம்பந்தப்பட்ட ஆசிரியர் களோடு பேசி நேரடியாகத் தீர்க்க முடியாவிட்டால், சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்திற்கும் நிதியுதவி நிறுவனத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறும். எச்சரிக்கை கொடுத்தும், கடுமையான தவறுகள் நிவர்த்தி செய்யப்படாவிட்டால், பள்ளி நிர்வாகிகள் விண்ணப்பித்தவுடன், கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளிக்குள் கேள்விக்குரிய பாடங்களை நடத்துவதற்கான அதிகாரத்தைப சம்பந்தப்பட்ட நிதிஉதவி தரும் நிறுவனங்களிடமிருந்து கல்வி இயக்குநரகம் திரும்பப் பெறலாம்.

நிதியுதவி
HSK-பாடங்களுக்கு நிதியளிப்பது நிதியுதவி நிறுவங்களின் பொறுப்பாகும். ஒரு சில பள்ளி சமூகங்கள் நிதிப் பங்களிப்பைச் செய்கின்றன அல்லது தனிப்பட்ட HSK-ஆசிரியர்களைத் தாங்களே பணியமர்த்துகின்றனர். பெரும்பான்மையான நிதியுதவி விஷயத்தில், பெற்றோரும் பங்களிப்பைத் தருகின்றனர்.

HSK-ஆசிரியர்கள்
HSK-ஆசிரியர்களை தேர்வு செய்தல் மற்றும் வேலை வாய்ப்பளித்தல் ஆகியவை நிதியுதவி தரும நிறுவனங்களின் பொறுப்பாகும்.

மாகாணத்தில் கற்பிக்கத் தொடங்கும் HSK-ஆசிரியர்களை நிதியுதவி நிறுவனங்கள்

– போதிய கல்வித் தகுதி (ஆசிரியர் பயிற்சி அல்லது அதற்கு சமமான பயிற்சி அல்லது தொடர்புடைய அனுபவம் மற்றும் தொடர் கல்வி செய்து மேலதிகப் பயிற்சி) பெற்றிருக்கிறார்கள் என்றும்,

– போதுமான வாய்வழி ஜெர்மன் திறன்களைக் கொண்டிருக்கிறார்கள் என்றும் (சம்பந்தப்பட்டவர்கள் பொதுவான ஐரோப்பியக் குறிப்புக் கட்டமைப்பின் B1 நிலையை அடைந்துவிட்டதாகச் சான்றிதழைக் காட்டுகிறார்கள்),

– கல்வி இயக்குநரகம்(கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அலுவலகம்) நடத்தும் தகவல் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள் என்றும்,

கல்வித் துறையின் சார்பாக சூரிச் கல்விப் பல்கலைக்கழகம் வழங்கும் அறிமுகத் தொகுதியில் கலந்து கொள்கிறார்கள் என்றும்.

உறுதி செய்கின்றனர்

ஒரு HSK-ஆசிரியர் மேற்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை-யென்றால், கல்வி இயக்குனரகம் சரியான நடவடிக்கைகளை எடுக்க பொறுப்பான நிதியுதவி நிறுவனங்களைக் கேட்கும். தேவைப்பட்டால், கல்வி இயக்குனரகம் மாகாணத்தால் அங்கீகரிக்கப்பட்ட HSK-படிப்புகளின் கற்பிப்பதற்கான HSK-ஆசிரியர் உரிமத்தைத் திரும்பப் பெறலாம்.

HSK ஆசிரியர்கள் உள்ளூர் பள்ளி நிலைமைகளை நன்கு அறிந்திருந்தால் அவர்களின் கற்பிக்கும் பணிகளுக்கு இது சாதகமாக இருக்கும். இந்தக் காரணத்திற்காக, சில ஆண்டுகளுக்குப் பிறகு HSK-ஆசிரியர்களை மாற்ற வேண்டாம் என்று நிதியுதவி நிறுவனங்கள் பரிந்துரைக்கப்படுகிறார்கள் («சுழற்சிக் கொள்கை» இல்லை).

தகவல் மற்றும் பதிவு
தனிப்பட்ட நிதியுதவி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் பள்ளிகள் மற்றும் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அதிகாரம் ஆகியவை சம்பந்தப்பட்ட குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் தற்போதுள்ள

படிப்புகளின் வாய்ப்புத் திட்டத்தை ப் பற்றி தெரிவிக்கின்றன. வகுப்புகளை மழலையர் பள்ளியில் இருந்து அல்லது பின்னர் - இது சம்பந்தப்பட்ட மொழி வழங்கப்படுவதைப் பொறுத்தது. கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி ஆசிரியர்கள் ஜனவரி மாதம் பெற்றோருக்கு பதிவுப் படிவத்தை விநியோகிக்கின்றனர்.

அந்தந்த நிதியுதவி நிறுவனத்தின் HSK-படிப்புகளை ஒருங்கிணைக்கும் நபரிடம், பெற்றோர்கள் தங்கள் குழந்தையை நேரடியாகப் பதிவு செய்கிறார்கள். நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள் குறிப்பிட்ட பாடங்கள் (நேரங்கள், இருப்பிடங்கள், HSK-ஆசிரியர்) அல்லது அவற்றின் நடக்காத விஷயங்களைப் பற்றி முன்கூட்டியே மற்றும் நேரடியாகப் பெற்றோருக்குத் தெரிவிக்கின்றனர். வகுப்புகள் பொதுவாக பள்ளி ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பமாகும். பதிவு மாணவரைத் தவறாமல் வகுப்புக்கு வர சொல்லிக் கட்டாயப்படுத்துகிறது, மேலும் பெற்றோர்கள் பதிவை ரத்துசெய்யும் வரை அல்லது குழந்தை கட்டாயப் பள்ளிப்படிப்பை முடிக்கும் வரை இந்த பதிவு செல்லுபடியாகும்.

கற்பித்தல் கருவிகள் மற்றும் கற்பிக்கும் பொருட்கள்

கற்பித்தல் பொருட்களை வாங்குவது நிதியுதவியளிக்கும் நிறுவனங்களின் பொறுப்பாகும்.

HSK ஆசிரியர்களுக்குத் தொழில்நுட்ப கற்பித்தல் கருவிகள் (நகலெடுக்கும் இயந்திரம் (காபியர்) மற்றும் - கிடைத்தால் - பீமர் / காட்சிப்படுத்தும் இயந்திரம் (விஷுவலைசர்), கணினி, இணைய அணுகல் மற்றும் பிற) மற்றும் கற்பித்தல் பொருட்கள் (சுண்ண எழுதுகோல், புத்தகங்கள், காகிதம் போன்றவை) இலவசமாக வழங்க பள்ளிச் சமூகங்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

வகுப்பு நேரங்கள் மற்றும் வகுப்பறைகள்

மாணவர்கள் மழலையர் பள்ளி மட்டத்தில் HSK- வகுப்புக்கு சென்று ஆரம்பப் பள்ளிலும் 1 ஆம் வகுப்பிலும் அதிகபட்சம் இரண்டு பாடங்கள், அதற்கு பின்வரும் பின்வரும் வகுப்புகளில் வாரத்திற்கு அதிகபட்சம் நான்கு பாடங்கள் படிக்கிறார்கள். முடிந்தவரை, வழக்கமான கால அட்டவணையில் (காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை, மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரை) HSK-பாடங்கள் நடைபெறும். வழக்கமான பாடங்களுக்குப் பதிலாக இதுவும் அதிகபட்சம் இரண்டு பாடங்கள் என்ற அளவில் நடைபெறலாம். இந்தச் சூழ்நிலையில், சம்பந்தப்பட்ட குழந்தைகளுக்கு அப்படிப்பட்ட பாடங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் வசந்த காலத்தில், நிதியுதவி நிறுவனங்கள் உள்ளூர் பள்ளியில் பொறுப்பானவர்களிடம் வகுப்பறை இடத்திற்காக கோரிக்கை விடுத்து, விரும்பிய பாட நேரங்களைக் குறிப்பிடுவார்கள். நிதியுதவி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் இதைப்பற்றி கலந்து பேசியப் பிறகு முடிவாக நேரங்கள் தீர்மானிக்கப்படும்.

அடிப்படையில் HSK-பாடங்கள் கட்டாய கல்விக்கான அரசுப் பள்ளியின் அறைகளில், குழந்தைகள் வசிக்கும் இடத்திற்கு முடிந்தவரை நெருக்கமாக இருக்கும் இடங்களில் நடைபெறுகின்றன. பாடசாலைகள் தகுந்த வகுப்பறைகளை இலவசமாக வழங்கும். HSK- ஆசிரியர்கள் பள்ளி விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்கின்றனர்.

பள்ளி ஆண்டின் தொடக்கத்தில், நிதியுதவி நிறுவனங்கள் அந்தந்த பள்ளியின் உள்ளூர் பொறுப்பாளர்களுக்குப் பாடங்களின் திட்டமான ஒழுங்கமைத்தலைப் (வகுப்புகள், நேரங்கள், அறைகள், HSK-ஆசிரியர்கள்) பற்றி தெரிவிக்கின்றனர். நிதியுதவி நிறுவனங்கள் இந்தத் தகவலைக் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அலுவலகத்திற்கும் அனுப்புகிறார்கள், இந்த அலுவலகத்திற்கு HSK-பாடங்கள் பற்றிய தகவலை தெரிந்துக்கொள்வதற்கும் அவற்றின் ஒருங்கிணைப்பை ஆதரிக்கவும் இந்தத் தகவல் பயன்படுகிறது.

HSK-ஆசிரியர்கள் மற்றும் உள்ளூர் பள்ளிக்கு இடையேயான ஒத்துழைப்பு

கட்டாயக் கல்விக்கான ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் மற்றும் HSK-வகுப்பு ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள். பரஸ்பர ஆர்வமுள்ள தலைப்புகளைக் கையாளும் பள்ளி மாநாடுகளுக்கு HSK-ஆசிரியர்களை பள்ளி நிர்வாகங்கள் அழைப்பது அர்த்தமுள்ளதாக இருக்கிறது. அவர்கள் எப்போதாவது ஒரு பரிமாற்ற கூட்டத்திற்கு, உதாரணமாக வருடத்திற்கு ஒரு முறை, HSK-ஆசிரியர்களை அழைக்கலாம். ஒருவரையொருவர் அறிந்துகொள்வது, அறிவு மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வது அல்லது பொதுவான பிரச்னைகளைப் பற்றி விவாதிப்பது ஆகியவை இத்தகைய சந்திப்புகளின் நோக்கமாகும்.

HSK-பாடம் என்பது கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளியின் ஒரு சலுகையாகும். HSK ஆசிரியர்கள் பள்ளி நடவடிக்கைகள் மற்றும் பள்ளி மேம்பாட்டுச் செயல்முறைகளில் பங்கேற்பது அர்த்தமுள்ளதாக இருக்கிறது. குறிப்பாக இருமொழி அல்லது பன்மொழி பேசும் குழந்தைகளை அதிக அளவில் கொண்ட பள்ளிகள்

அமைப்பாக வகுக்கப்பட்ட ஒத்துழைப்பால் பயனடைகின்றன. இது தனித்தனியாக குழந்தைகளை ஒன்றாக ஆதரித்தல், பன்மொழி மற்றும் *ஒன்றுக்கு மேற்பட்ட கலாச்சாரங்களுடன் தொடர்பான* கற்றல் திட்டங்களை செயல்படுத்துதல் அல்லது பெற்றோருக்கு தகவல் மற்றும் ஆலோசனைகளை ஒன்றாக சேர்த்து வழங்குதல் ஆகியவற்றைக் குறிக்கலாம். வழக்கமான வகுப்பு ஆசிரியர்கள் மட்டுமின்றி, ஜெர்மன் மொழியை இரண்டாம் மொழியாக (DaZ) நடத்தும் ஆசிரியர்கள் போன்ற கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி நிபுணர்களும் இந்த ஒத்துழைப்பால் பயனடையலாம். தகுந்த தகுதி பெற்ற HSK-ஆசிரியர்கள் , ஒன்றுக்கு மேற்பட்ட கலாச்சாரங்களை சித்தரிப்பிலும் மத்தியஸ்தத்திலும் வெற்றி பெற்றுள்ளனர். அவர்கள் கற்பிக்கும் மாணவர்கள் சம்மந்தப்பட்ட மதிப்பீடுகளில் HSK-ஆசிரியர்களையும் ஈடுபடுத்துவது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது: இவை கற்றல் மதிப்பீடுகளில், பள்ளி நிலை மதிப்பாய்வுகளில், தொழில் வாழ்க்கை முடிவுகளிலாகும்.

HSK-பாடங்களை மொழி மேம்பாட்டின் ஒரு பகுதியாகக் கருதி அவற்றை உள்ளூர் பள்ளித் திட்டத்தில் ஒருங்கிணைக்க இருமொழி அல்லது பன்மொழி குழந்தைகளைக் கொண்ட பள்ளிகளைக் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அலுவலகம் பரிந்துரைக்கிறது.

பள்ளி-பெற்றோர் இடையே ஒத்துழைப்புக்கான ஆதரவு

பள்ளி மற்றும் பெற்றோருக்கிடையிலான ஒத்துழைப்பு, அடிப்படையில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் படிப்பு மற்றும் பள்ளி வெற்றியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. HSK-ஆசிரியர்கள் பெற்றோருடன் தவறாமல் தொடர்பிலிருந்தால், மற்றும் பள்ளியில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் தங்கள் குழந்தைகளைக் கற்றலில் எவ்வாறு ஆதரிக்கலாம் என்று அவர்களுடன் கலந்துரையாடினால், கற்பதில் வெற்றியடைய இது நேர்மறையான விளைவை வழங்குகிறது.

பெற்றோருடன் இணைந்து, HSK-ஆசிரியர்கள் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கலாம். உதாரணமாக, அவர்கள் நிகழ்ச்சிகளில் உடன் வேலை செய்கிறார்கள் அல்லது தனிநபர் சந்திப்புகளில் மொழிபெயர்க்கிறார்கள். அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கலாச்சாரங்களுக்கு இடையே *மத்தியஸ்தத்திலும்* ஈடுபடலாம், இதற்கு இரண்டு மொழிகள் மற்றும் பள்ளி அமைப்புகள் பற்றிய நல்ல அறிவு தேவைப்படுகிறது. அவர்கள் அத்தகைய சேவைகளை, ஆசிரியர்கள் மற்றும் பள்ளி அதிகாரிகளுடனான ஒப்பந்தத்திற்குப் பின் வழங்குகிறார்கள்.

பள்ளி நிர்வாகிகளுடன் ஒத்துழைப்பு

கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளிக்குள் நல்ல சூழ்நிலையில் HSK-பாடங்கள் நடைபெறுவதை உறுதிசெய்ய உள்ளூர் பள்ளி அதிகாரிகள் உதவுகிறார்கள். தேவைப்பட்டால், நகராட்சியில் அல்லது பாடசாலை பிரிவுகளில், ஒருங்கிணைப்புக்காக ஒரு பொறுப்பான நபரை நியமிக்க அவர்கள் பரிந்துரைக்கப்படுகிறார்கள். கால அட்டவணையின் வடிவமைப்பு, இடத் தேவைகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக முன்கூட்டியே ஆலோசனைக்கேட்டுச் செய்வது அந்த நபரது பொறுப்பாகும்.

மாகாண அளவில் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு

கல்வித் துறையைப் பொறுத்தவரை, HSK-பாடங்களை ஒருங்கிணைப்பதற்கும் நிர்வாக ஆதரவை வழங்குவதற்கும் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அலுவலகம் பொறுப்பாகும். வழங்குநரைப் பொறுத்தவரை, நிதியுதவி நிறுவனம் என்பது உள்ளூர் மற்றும் மாநில அளவில் ஒருங்கிணைப்புக்குப் பொறுப்பான மற்றும் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அதிகாரியுடன் இணைந்து செயல்படும் ஒவ்வொரு நபருமாகும்.

இரண்டு அமைப்புகள் முக்கியமான தகவல்கள் பரிமாறப்படுவதையும், கருத்தியல் மற்றும் நிறுவன கேள்விகளை தெளிவுபடுத்தப்படுவதையும், கல்வியியல் அம்சங்களைக்குறித்து பேச்சு வார்த்தைகள் நடக்கும் என்பதையும் உறுதி செய்கின்றன. இவை «HSK-மாநாடு» மற்றும்
«HSK-மாநாட்டின் குழு» ஆகும். HSK-மாநாட்டில், நிலையான கட்டமைப்புகளின் நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பிரதிநிதிகள் (ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகம், ஜெர்மன் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் (DaZ) மற்றும் பள்ளி வாரியம் அனைத்திற்கும் தலா ஒரு பிரதிநிதி) குறிப்பிடப்படுகின்றனர். சூரிச் கல்விப் பல்கலைக்கழகம் HSK-குழுவின் கூட்டங்களில் பங்கேற்கிறது, மேலும் கல்வித் துறையின் சார்பாக HSK-ஆசிரியர்களுக்கான மேற்படிப்புக்கான கூடுதல் பயிற்சியை மேற்கொள்கிறது. HSK-நிதியுதவி நிறுவனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் HSK-மாநாட்டின் குழுவில் அமர்ந்துள்ளனர்.

HSK-நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகள் குறித்து கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அலுவலகத்திற்குத் தொடர்ந்து அறிக்கை அளிக்கின்றனர். இதை செய்ய அவர்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்து, ஜெர்மனில் மொழிபெயர்க்கப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் பிற ஆவணங்களைச் சமர்ப்பிக்கிறார்கள்.

இணைப்பு II: நிலைகளும் பாடங்களும் – ஓர் மேலோட்டம்

இப் பாடங்களின் பட்டியல் பாடத்தை திட்டமிடல் மற்றும் வடிவமைப்பிற்கான ஆதரவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. HSK-வகுப்புகளில் எந்தெந்த பள்ளி மட்டத்தில் எந்தெந்த பாடங்களைக் கையாளலாம் என்பது பற்றிய மேலோட்டத்தை இது வழங்குகிறது. இது பல பரிந்துரைக்கப்பட்ட தலைப்புகளை உள்ளடக்கியுள்ளது. குறைந்த எண்ணிக்கையிலான பாடங்கள் இருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் தலைப்புகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

இப் பாடங்கள் பாடத்திட்டம் 21 இன் ஒரு பகுதியாகும் மற்றும் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளியில் வழக்கமான வகுப்பில் கையாளப்படுகின்றன. தலைப்புகளுடன் தொடர்புடைய பாடத்திட்டம் 21 இன் திறன் பகுதிகள் பின்வரும் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

பாடம் நானும் மற்றவர்களும் - ஒன்றாக வாழ்தல்

பாடத்திட்டம் 21இன் உடனான இணைப்பு:
NMG.10 | RKE.1 | RKE.2 | RKE.5

சுழற்சி 1

– ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளுதல்; ஒருவரையொருவர் வாழ்த்துதல், தன்னை (ஒருவருக்கொருவர்) அறிமுகப்படுத்திக் கொள்ளுதல்.
– நடத்தை மற்றும் ஆசாரம் (சமுதாய ஒழுங்குமுறை); மழலையர் பள்ளி / பள்ளி: விதிகள், நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள், சடங்குகள்.
– மற்றவர்களுடன் சேர்ந்து ஏதேனும் செய்யதல் அல்லது அனுபவித்தல்; நட்பு; சண்டை ; நான் தனியாக என்ன செய்ய முடியும்

சுழற்சி 2

– வெவ்வேறு குழுக்கள் மற்றும் கலாச்சாரங்கள்: ஒரே மாதிரியான மற்றும் வெவ்வேறு விதிகள் மற்றும் மதிப்புகள், பரஸ்பர மரியாதை மற்றும் பரஸ்பர அங்கீகாரம், மோதல்கள் மற்றும் தீர்வு உத்திகள்
– நான் யார்: என்னைச் சிறப்புறச் செய்வது எது, நான் எவ்விடத்தைச் சேர்ந்தவர்
– பாலின பாத்திரங்கள்: சிறுவர் - சிறுமியர்
– குழந்தைகள் உரிமைகள்

சுழற்சி 3

– தனிநபர் மற்றும் குழு, நம்மைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு மற்றும் அந்நியப்படுத்தப்பட்ட உணர்வு
– பெரும்பான்மை மற்றும் சிறுபான்மையினர் ஒன்றாக வாழ்தல்: இனவாதம், தற்போதைய விவாதங்கள் மற்றும் நிகழ்வுகள்
– முன்மாதிரிகள் மற்றும் போற்றத் தக்கவர்கள்: விளையாட்டு, அறிவியல், கலாச்சாரம் மற்றும் வரலாறு
– ஒருவரின் சொந்த மற்றும் எதிர் பாலினத்துடனான உறவுகள் (கலாசாரம் சார்ந்த எதிர்பார்ப்புகளும்)
– மனித உரிமைகள்

தலைப்பு

குடும்பம்

பாடத்திட்டம் 21இன் உடனான இணைப்பு:
NMG.10 | RKE.2 | RKE.5

சுழற்சி **1**
– என் குடும்பம் மற்றும் உறவினர்கள்; குடும்பத்தில் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்

சுழற்சி 2
– குடும்பத்தில் வேலை மற்றும் பணிகளின் பகிர்வு
– என் குடும்பத்தின் வரலாறு: தலைமுறைகள் மற்றும் குடும்ப வம்சாவளி
– வெவ்வேறு குடும்ப வடிவங்கள்

சுழற்சி 3
– குடும்ப உறுப்பினர்களின் பாத்திரங்கள்: கால மாறுதலில், கலாச்சார வேறுபாடுகள்
– பாத்திரங்களைப் பற்றிய எனது (சொந்த) புரிதல்
– வரலாறு மற்றும் கலாச்சாரத்தைப் பொறுத்து குடும்பத்தின் செயல்பாடுகள் மற்றும் வடிவங்கள்
– சொந்த மதிப்புகள்; நெறிமுறைகள்

தலைப்பு

விளையாட்டு மற்றும் ஓய்வு

பாடத்திட்டம் 21இன் உடனான இணைப்பு:
NMG.10 | RKE.5

சுழற்சி **1**
– விளையாடுதல்: ஒருவருடனொருவர், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு விளையாட்டுப் பொருட்களுடன்; நவீன மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்
– ஓய்வு நேரம் மற்றும் பொழுதுபோக்குகள்
– கருவிகள் மற்றும் வேலை உபகரணங்கள்

சுழற்சி 2
– இளைப்பாறுதல் மற்றும் ஓய்வெடுத்தல்
– ஓய்வு நேர நடவடிக்கைகள்; விளையாட்டு; சகவயதினர் வட்டம்; சங்கங்கள்
– டிஜிட்டல் மற்றும் பிற ஊடகங்களைக் கையாளுதல்
– விளம்பரம்

சுழற்சி 3
– இளைப்பாறுதல் மற்றும் ஓய்வெடுத்தல்
– ஓய்வு நேர நடவடிக்கைகள்; இளைஞர் சங்கம்; இளைஞர் கலாச்சாரங்கள் (இசை, மொழி); சகவயதினர் வட்டம்; சங்கங்கள்
– டிஜிட்டல் மற்றும் பிற ஊடகங்களைக் கையாளுதல்
– விளம்பரம்

தலைப்பு

வாழ்தல், உறைவிடம் மற்றும் நகரம்

பாடத்திட்டம் 21 உடனான இணைப்பு:
NMG.8 | RZG.3 | RZG.4

சுழற்சி 1
– மழலையர் பள்ளியில் / பள்ளியில் சூழ்நிலை
– எங்கள் குடியிருப்பு / எங்கள் வீடு மற்றும் சுற்றுப்புறங்கள்

சுழற்சி 2
– வீடுகள் மற்றும் குடியிருப்புகள்

சுழற்சி 3
– வீட்டுவசதி மற்றும் கட்டடக்கலை பாணிகள்; வரலாற்று வளர்ச்சிகள்

தலைப்பு

திருவிழாக்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் நாகரீகங்கள்

பாடத்திட்டம் 21ன் உடனான இணைப்பு:
NMG.7 | RZG.2

சுழற்சி 1
– பிறந்தநாள் மற்றும் பிற முக்கிய திருவிழாக்கள், பல்வேறு வகையான கொண்டாட்டங்கள்
– ஆடைகள் மற்றும் சந்தர்ப்பத்தைப் பொறுத்து வெவ்வேறு விதமான ஆடைகள்

சுழற்சி 2
– திருவிழாக்களை வெவ்வேறு வழிகளில் கொண்டாடுதல்; மத மரபுகள்
– கால மாற்றத்தில் ஆடை நாகரீகங்கள்; தொழில்முறை ஆடைகள், ஆடைகள் மற்றும் அதன் பங்கு / நிலை, தர அங்கீகாரம் பெற்ற பொருட்கள்

சுழற்சி 3
– பூர்வீக கலாச்சாரம் மற்றும் விருந்துகள்
– வரலாற்று மாற்றத்தில் நாகரீக பாணி மற்றும் சடங்குகள்

தலைப்பு

ஆரோக்கியம் மற்றும் உணவு

பாடத்திட்டம் 21 உடனான இணைப்பு:
[NMG.1](#) | [NT .7](#)

சுழற்சி 1

– என் உடல் மற்றும் மனித உடல்: அதன் பாகங்கள், எனது மற்றும் பிறரின் உடல் சீர்மை; ஐந்து புலன்கள்
– சுகாதாரம்
– மருத்துவ பராமரிப்பு
– ஆரோக்கியமான உணவு மற்றும் பானம், உணவுப் பழக்கம்

சுழற்சி 2

– உடல்நலம் மற்றும் நோய்; ஆரோக்கியமான வாழ்க்கை முறை
– உணவு எங்கிருந்து வருகிறது, பருவத்தைப் பொறுத்து காய்கறிகள் மற்றும் பழங்கள்

சுழற்சி 3

– விளையாட்டு; போதை
– ஊட்டச்சத்து; கலாச்சாரம், வரலாறு மற்றும் சூழலைப் பொறுத்து வெவ்வேறு உணவு கலாச்சாரங்கள்
–

தலைப்பு

புவியியல்

பாடத்திட்டம் 21 உடனான இணைப்பு:
[NMG.8](#)

சுழற்சி 1

குழந்தைகளின் அனுபவத்திலிருந்து புவியியல் பெயர்கள் (வசிக்கும் இடம், பூர்வீக நாடுகள், சுவிட்சர்லாந்து, அண்டை நாடு போன்றவை); இடஞ்சார்ந்த நோக்குநிலைக்கான சொற்கள்
– என் பூர்வீக நாடு: புவியியல், காலநிலை பற்றிய கண்ணோட்டம்

சுழற்சி 2

– பூர்வீக நாடுகளில் உள்ள முக்கியமான நீர்நிலைகள், மலைகள் மற்றும் நகரங்கள்

சுழற்சி 3

– பூர்வீக நாடுகளின் பிராந்தியங்களின் புவியியல் பண்புகள்

தலைப்பு

இயற்கை மற்றும் தொழில்நுட்பம்

பாடத்திட்டம் 21இன் உடனான இணைப்பு:
NMG.2 | NMG.3 | NMG.4 | NT.1 | NT.2 | NT.8 | NT.9

சுழற்சி 1
– விலங்குகள்; செல்லப்பிராணிகள்; விலங்குகள் மற்றும் தாவரங்கள்; காடு
– பழங்கள் மற்றும் காய்கறிகள்; நான்கு கூறுகள்
– பருவங்கள் மற்றும் இயற்கை மாற்றங்கள்
– நேரம் பற்றிய சொற்கள் (ஆண்டு, மாதம், வாரம், நாள், மணி, மாலை, மதியம், நேற்று, இன்று, நாளை, முதலியன), மணிநேரங்கள்
– வீட்டு உபயோகச் சாதனங்கள்
– குழந்தைகள் தாங்களே பயன்படுத்தும் போக்குவரத்து வழிமுறைகள் (மிதிவண்டிகள், ஸ்கேட்போர்டுகள், ஸ்கூட்டர்கள் போன்றவை)

சுழற்சி 2
– விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்கள்
– உணவுச் சங்கிலி
– வானிலை மற்றும் வானிலை முன்னறிவிப்பு
– சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பேரழிவுகள்
– டிஜிட்டல் விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்கள்

சுழற்சி 3
– சூழலியல், சுற்றுச்சூழலுக்கு ஆபத்து மற்றும் பாதுகாப்பு (மறுசுழற்சி மற்றும் கழிவுகளை அகற்றுவது ஆகியவை)
– தற்போதைய அறிவியல் சம்பந்தமான விவாதங்கள் (விலங்குகள் மீதான பரிசோதனைகள், மரபணு ஆராய்ச்சி போன்றவை)
– டிஜிட்டல் விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் தொலைதொடர்புச் சாதனங்கள்

தலைப்பு

இலக்கியம் மற்றும் கலை

பாடத்திட்டம் 21 உடனான இணைப்பு:
மொழிகள்

சுழற்சி 1
– பாடல்கள்; மழலையர் பாடல்கள மற்றும் வசனங்கள்; விநோதக் கதை; பட புத்தகங்கள்
– வண்ணங்கள்; திரைப்படங்கள்
– உங்கள் சொந்த படைப்புகளை வடிவமைத்து அவற்றைப் பற்றி மற்றவர்களிடம் பேசுதல்

சுழற்சி 2
– கவிதைகள், இதிகாசங்கள், செவிவழிக் கதைகள், கவிதைகள்; கலாச்சாரங்களுக்கு இடையிலான நூலகம்
– திரைப்படங்கள்

சுழற்சி 3
– பாரம்பரிய மற்றும் நவீன இலக்கிய எடுத்துக்காட்டுகள்
– திரைப்படங்கள்
– காட்சிக் கலைகள், இசை மற்றும் பிற கலை வகைகள்; கலைஞர்கள்

தலைப்பு

கடந்த காலம் மற்றும் வரலாறு

பாடத்திட்டம் 21இன் உடனான இணைப்பு:
NMG.9 | RZG.6 | RZG.7 | RZG.8 | RKE.4

சுழற்சி 1
– «நான் சிறுமியாய்/சிறுவனாய் இருந்தபோது»
– நேற்று இன்று - வேறுபாடுகள்
– பூர்வீக நாடுகளில் சுய அனுபவங்கள்: பயணம், விடுமுறைகள்

சுழற்சி 2
– என் குடும்பத்தின் வரலாறு; இடம்பெயர்தல்
– பூர்வீக நாடுகளின் வரலாறு: முக்கிய நிகழ்வுகள், மனிதத் தோற்றம் பற்றிய கட்டுக் கதைகள்

சுழற்சி 3
– எனது வாழ்க்கை வரலாறு (எ.கா. கற்றல் அல்லது மொழிகள் தொடர்பாக)
– பூர்வீக நாடுகளில் தற்போதைய சமூக மற்றும் அரசியல் முன்னேற்றங்கள்
– மதங்கள் மற்றும் உலகக் கண்ணோட்டங்கள்
– அரசியல் கல்வி (எ.கா. தேர்தல் மற்றும் வாக்களிப்பு)

தலைப்பு

தொழில் உலகம் மற்றும் கல்வி

பாடத்திட்டம் 21 உடனான இணைப்பு:
NMG.6 | WAH.1 | WAH.2 | WAH.3

சுழற்சி 1
– தனிப்பட்ட சூழலில் மக்களின் தொழில்கள்; பள்ளி மற்றும் பொது இடங்களில் தொழில்கள்(விருந்தோம்பல், காவல்துறை, மருத்துவமனை, விற்பனை போன்றவை)

சுழற்சி 2
– ஆத்ம திருப்திக்கான வேலை; வெவ்வேறு தொழில்களில் இருந்து முன்மாதிரியான பிரமுகர்கள்
– கல்வி மற்றும் வேலையின் முக்கியத்துவம்

சுழற்சி 3
– தொழில் தேர்வு மற்றும் தொழில் கொண்டோரின் உலகிற்கு அல்லது சுவிட்சர்லாந்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு மற்றும் பூர்வீக நாடுகளில் இடமாற்றம்: தொழில்கள் மற்றும் நிபந்தனைகள், நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள்
– தொழில் மற்றும் அடையாளம்; ஒருவரின் சொந்த மொழியியல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட கலாச்சாரங்களுடன் தொடர்புடையதிறன்களைப் பயன்படுத்துதல்; பாலின பிரச்சினைகள்
– பொருளாதாரம்: பல்வேறு துறைகள், வரலாற்று வளர்ச்சி, வேலையின்மை, தொழிற்சங்கங்கள்

இணைப்பு III: பிரசுரங்கள்

இந்த பின்னிணைப்பில் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரசுரங்கள் அடங்கும். முதல் மொழி ஆதரவு மற்றும் பன்மொழிக்கான கற்றல் பொருட்கள், பிரசுரங்கள் மற்றும் பிற ஆதாரங்களின் பரந்த தேர்வை கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளி அலுவலகத்தின் இணையதளத்தில் காணலாம்: www.zh.ch/hsk

PH சூரிச்சின் சர்வதேச கல்வி மேம்பாட்டுத் துறை (கல்வியில் சர்வதேச திட்டங்கள்) (2018): பூர்வீக மொழி கற்பித்தலுக்கான பொருட்கள்; வட்டார மொழி மற்றும் இயல்புநிலை மொழியைக் கையாள்வது, சூரிச்: கல்வி பல்கலைக்கழகம் சூரிச்.

சூரிச் மாகாணத்தின் கல்வி இயக்குநரகம் (2017): சூரிச் மாநிலத்தின் கட்டாயக் கல்விக்கான அரசுப் பள்ளியின பாடத்திட்டம்.

ஜுபிசி , ஆன்யா மற்றும் பியூல்மன், ரெகினா(2014): HSK தாய்மொழி மற்றும் கலாச்சாரத்தில் பாடங்கள். சுவிட்சர்லாந்து, பெர்னிலுள்ள ஒரு நல்ல நடைமுறையின் தேர்வு: தலைமைச் செயலகம் EDK.